பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 12 வியாழக்கிழமை 29.02.2024 கதிர் 114

# வடக்கு காணிப் பிரச்சினை பற்றி அடுத்த வாரம் கலந்துரையாடல்

## தமிழ் எம்.பிக்களுடன் நடத்த தயாராகிறார் ஜனாதிபதி

வடக்கில் காணப்படும் காணிப் பிரச்சினை குறித்து அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் தமிழ்க் கட்சிப் பிரதிநிகளைச் சந்தித்து இது குறித்துக் கலந்துரையாடவுள்ளேன் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற 'நல்லிணக்கத்துக்கான மதங்கள்' தேசிய சர்வமத மாநாட்டில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

☞2

## இனி இது ரகசியம் அல்ல!

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் விவகாரம் இப்போது கல்லூரி எல்லைகளைத் தாண்டி ஊடகங்களிடம் வந்திருக்கிறது. ஏற்கனவே கல்லூரியின் பதில் அதிபரை அந்தக் கதிரையில் தக்கவைப்பதற்கான முயற்சிக்காக "ஆண்கள் பாடசாலைக்கு பெண் அதிபர் வேண்டாம்" என்ற பொருளில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் சமூக ஊடகங்களில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டதை அடுத்து அந்த ஆண், பெண் வாதம் மெல்ல அடங்கிவிட்டது.

ஆனால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலையீட்டினால் பிரச்சினை இன்னும் தீர்ந்தபாடில்லை. அதிபர் விடயத்தில் கல்லூரியின் பழைய மாணவர் சங்கமும் இலங்கை ஆசிரியர்

☞2

# சரியான காலத்தில் ஜனாதிபதித் தேர்தல்

## சுவிஸ் தூதரிடம் சபாநாயகர் உறுதி

ஜனாதிபதித் தேர்தல் சட்ட ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட உரிய காலத்தில் நடத்தப்படும் அதனைத் தொடர்ந்து அடுத்த வருடம் உரிய காலப்பகுதியில் பொதுத் தேர்தலும் நடத்தப்படும் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இலங்கைக்கான சுவிற்சர்லாந்து தூதுவர் கலாநிதி சிரி வோல்ட்டிடம் உறுதியளித்தார்.

இருவருக்கும் இடையிலான

☞8

# தவறான தகவல்கள் மூலம் அஸ்வெசும உதவி பெற்றோர் மீது சட்ட நடவடிக்கை

## 7 ஆயிரம் பேர் மீது வழக்கு என்கிறார் அமைச்சர்

தவறான தகவல்களை வழங்கி அஸ்வெசும உதவியைப் பெற்ற 7 ஆயிரம் பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதுஎன்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார். அவர்களுக்கு வழங்கப்பட்ட பணம் திரும்பப் பெறப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அஸ்வெசும முதல் கட்ட கணக்கெடுப்பில், 34 இலட்சம் குடும்ப அலகுகளின் தகவல்கள் சரிபார்க்கப்பட்டன. இதன்படி 19 இலட்சம் குடும்பங்கள் பயன்பெறதகுதிபெற்றன. இதுவரை பெறப்பட்ட மேல்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளின் அடிப்படையில், ஜூலை 2024 முதல் தகுதியானவர்களுக்குப் பணம் செலுத்த நலன்புரி நன்மைகள் சபை தயாராக உள்ளது.

எங்களுக்கு 12,27,000

☞8

# பொருளாதார வளர்ச்சிக்கு இரு ஆண்டுகள் பிடிக்கும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

இலங்கையில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட இன்னும் இரண்டு ஆண்டுகள் பிடிக்கும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற 'சிறந்த பெண் தொழில்முனைவோருக்கான விருதுவிழா 2023' இலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்பை அதிகரித்தல், முக்கிய வர்த்தக நடவடிக்கைகளில் பெண்களை இணைத்துக்கொள்ளல் உள்ளிட்ட நோக்கங்களுக்காக 1985ஆம் ஆண்டு தேசிய பெண் வர்த்தக சம்மேளனம் ஸ்தாபிக்கப்பட்டது.

'கடந்த சிலவருடங்கள் சுமூகமானதாக இருக்கவில்லை. வர்த்தகர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் நெருக்கடியான காலகட்டமாக அமைந்திருந்தது. பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தொழிலை முன்னெடுத்துச்செல்ல நீங்கள் மேற்கொண்ட முயற்சிகள் பாராட்டுக் குரியது.

2024ஆம் ஆண்டில் ஓரளவு பொருளாதார வளர்ச்சி ஏற்படுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது. கடந்த ஆண்டின் கடைசி இரண்டு

☞2

### மார்ச் மாதத்துக்குப் பின்னர்

# பெரமுன தலைமையில் புதிய அரசியல் கூட்டணி

மார்ச் மாதம் 05 ஆம் திகதிக்கு பின்னர் அரசியலில் எதிர்பாராத மாற்றங்கள் ஏற்படலாம். ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையில் புதிய அரசியல் கூட்டணியை உருவாக்குவோம் என பொதுஜனபெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார தெரிவித்தார்.

சிறீலங்காபொதுஜன பெரமுனவின் கொழும்பு அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்ததார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிதி வங்குரோத்து நிலை தொடர்பில் ஆராயும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு அண்மையில் முன்னிலையாகிய திறைசேரியின் செயலாளர் மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் ஆகியோர் நிதி வங்குரோத்து நிலையை தாங்கள் அறிவிக்கவில்லை என்று குறிப்பிட்டார்கள். ஆனால் வங்குரோத்து நிலைக்கு ராஜபக்சக்கள் பொறுப்புக்கூற

☞8

# இந்திய – ரஷ்ய கூட்டிணைந்த நிறுவன முகாமையிடம் மத்தள

## விமான நிலையத்தை தனியார் மயப்படுத்தும் பணி துரிதம்

இந்தியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளின் நிறுவனங்கள் கூட்டிணைந்து மத்தள விமான நிலையத்தின் ஒழுங்குப்படுத்தல் பணிகளை முன்னெடுக்கவுள்ளதாக துறைமுகம் கப்பற்றுறை மற்றும் சிவில்விமானசேவைகள் அமைச்சின் செயலாளர் கே.டி.எஸ்.ருவன்சந்திர குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மத்தள விமான நிலையத்தின் அபிவிருத்தி மற்றும் ஒழுங்குப்படுத்தல் பணிகளை முன்னெடுப்பதற்கு இந்தியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளின் தனியார் நிறுவனங்கள் முன்னிலையாகியுள்ளன.

இந்த நிறுவனங்களின் முகாமைத்துவங்களுடன் பலமுறை மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களைத் தொடர்ந்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதுடன், கலந்துரையாடல் வெற்றிப் பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இந்தியா- ரஸ்யா கூட்டு ஒழுங்குப்படுத்தல் ஊடாக கிடைக்கப்பெறும் இலாபத்தின் ஒரு பகுதி இலங்கைக்குக் கிட்டும் என்றும் தெரிவித்தார்.

மத்தள மஹிந்த ராஜபக்ச

☞2

# மனிதநேயம் மிக்க அரசியல் கூட்டணி உருவாக்க சம்பிக்க ரணவக்க முயற்சி

## ஐக்கிய மக்கள் சக்தி உட்பட சகல கட்சிகளுடனும் பேச்சு

சகலகட்சிகளுடனும் பேசி மனித நேயமிக்க அரசியல் கூட்டணி ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சியில் தமது கட்சி ஈடுபட்டுள்ளது என்று ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகபெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபையின் உறுப்பினர்களுக்கும், ஐக்கிய குடியரசு முன்னணியின் உறுப்பினர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் கொழும்பில் உள்ள சுதந்திர மக்கள் சபையின் காரியாலயத்தில் இடம்பெற்ற பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு

☞8

# இந்தியாவிலேயே சாந்தன் நேற்றுக் காலமானார்

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று விடுதலை செய்யப்பட்ட இலங்கை தமிழரான சாந்தன் உடல்நலக்குறைவால் நேற்று இந்தியாவில் உயிரிழந்தார்.

அவரை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதற்கான ஏற்பாடுகள் இந்திய இலங்கை அரசுகளால் மேற்கொள்ளப்பட்ட நிலையில் அவரது உயிர் பிரிந்தது. தனது இறுதிக் காலத்தில் தாயாரை ஒரு தடவை பார்த்து அவரது கையால் உணவருந்த வேண்டும் என்ற சாந்தனின் ஆசை நிறைவேறாமலேயே அவர் உயிரிழந்தார்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட சாந்தனுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. அது நிறைவேற்றப்படாத நிலையில் ஆயுள் தண்டனைக் காலமும் முடிந்து பல ஆண்டுகளாக அவர்கள் சிறையிலேயே அடைக்கப்பட்டிருந்தனர். அவர்களை விடுவிப்பதற்கான நீண்ட சட்டப்போராட்டங்களின் பின்னர் இந்தக் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 7 பேரும் விடுவிக்கப்பட்டனர். அதில் சாந்தனும் ஒருவர். 2022ஆம் ஆண்டு அவர் விடுவிக்கப்பட்டார்.

அவர் நாடு திரும்ப விரும்பிய போதும் அதற்கான பயண ஆவணங்கள் இல்லை என்பதைக் காரணம் காட்டி அவரை தமிழ்நாட்டில் உள்ள சிறப்புத் தடுப்பு முகாமில் இந்திய அரசு தடுத்து வைத்திருந்தது. அங்கு அவரது உடல் நிலை மோசமடைந்தது. அதனை அடுத்து அவர் நாடு திரும்ப அனுமதிக்க வேண்டும்

☞8

# வடக்கின் தூய்மைத் திட்டத்திற்கு இந்திய தூதரகம் ஒத்துழைப்பு



தூய்மை திட்டத்திற்கான பூரண ஒத்துழைப்புகளை வழங்க தயார் என யாழ்ப்பாணத்திற்கான புதிய இந்திய துணை தூதுவர் வடக்கு மாகாண கௌரவ ஆளுநரிடம் உறுதி யாழ்ப்பாணத்திற்கான புதிய இந்திய துணைத் தூதுவர் செவிதி சாய் முரளி, வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸை நேற்றுச் சந்தித்தார். வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் சந்திப்பு நடைபெற்றது.

மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள், மக்களின் தேவைகள் உள்ளிட்ட பலவிடயங்கள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் இதன் போது இந்திய

☞8

## இனி இது .....

சங்கமும் புதிதாக நியமனம் பெற்ற அதிபருக்கே தமது ஆதரவு என்று நேற்று ஊடகங்களுக்கு அறிவித்தன. அதாவது பொதுச் சேவைகள் ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்பட்ட அதிபருக்கே தங்கள் ஆதரவு என்று அவை தெரிவித்துள்ளன.

இருந்தாலும் பதில் அதிபர் தனது கடமைகளைப் பொறுப்புக்களை இன்னும் புதிய அதிபரிடம் ஒப்படைக்கிறார் இல்லை என்கிற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. அதற்குக் காரணம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. அவரும் பாடசாலையின் ஒரு பழைய மாணவர். அத்தோடு அமைச்சராகவும் இருக்கின்ற காரணத்தால் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி பதில் அதிபரை பாடசாலையின் நிரந்தர அதிபராக்க முயற்சிக்கின்றார். அதை நம்பி பதில் அதிபரும் இன்னும் கதிரையைப் பிடித்துக்கெரண்டு இருக்கப் பார்க்கிறார்.

இது விடயத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்குத் தோற்றுப்போன வரலாறு ஒன்றுண்டு. அதுவும் பக்கத்துப் பாடசாலையான வேம்படி மகளிர் கல்லூரியில்தான் நிகழ்ந்தது. அங்கும் இதேபோன்றதொரு பிரச்சினைதான். பொதுச்சேவைகள் ஆணைக்குழு புதிய அதிபர் ஒருவரை நிமிக்க, அங்கிருந்த மற்றொருவர் பொறுப்புக்களை ஒப்படைக்க முடியாது என்று அடம்பிடித்தார். அப்போது அவருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவே பின்னணியில் இருந்தார்.

அமைச்சர் எவ்வளவோ முயன்றும் அதிபர் பதவி மாற்றத்தை ஏற்படுத்த முடியவில்லை. போதாததற்கு புதிய அதிபரைப் பதவியேற்க விடாமல் தடுத்த குற்றச்சாட்டின் கீழ் முரண்டு பிடித்த அதிபரை ஆசிரியர் பணியிலிருந்தும் இடைநீக்கம் செய்தார்கள். அதன் பின்னர் நீண்ட நாட்களாக முயற்சி செய்துதான் அவரால் தனது பதவியையே திரும்பப்பெற முடி;தது. வேம்படியின் அதிபர் நியமனத்தில் தலையிட்டு மூக்குடைபட்டது போதாது என்று இப்போது மத்திய கல்லூரி அதிபர் விடயத்திலும் தலையிட்டுள்ளார் அமைச்சர்.

தானும் ஒரு பழைய மாணவன் என்ற அடிப்படையில் மத்திய கல்லூரிக்குத் தகுதியான ஒருவரே அதிபராக நியமனம் செய்யப்படவேண்டும் என்று அமைச்சர் பகிரங்கமாகவே தற்போதைய பதில் அதிவருக்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவித்துள்ளார். மத்திய கல்லூரி அதிபர் நியமனம் பொதுச்சேவைகள் ஆணைக்குழுவால் வழங்கப்பட்டது. அவ்வளவு இலகுவில் அதனை மாற்றிவிட முடியாது. அதுதான் வேம்படி அதிபர் விடயத்திலும் நடந்தது. அமைச்சர் அதனை மறந்துவிட்டார் போலும்.....

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

மதத்திற்கும் நல்லிணக்கத்திற்கும் உள்ள தொடர்பை நாங்கள் நன்கு அறிவோம். எங்களுக்கு இனவாதம் மற்றும் மதவாதம் பற்றிய அனுபவம் உள்ளது. இதன் விளைவாக, நாங்கள் ஒரு பயங்கரமான போரை எதிர்கொண்டோம். போர் முடிவடைந்த பின்னர் சகவாழ்வு தொடர்பில் எமது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நல்லிணக் கத்தைக் கட்டியெழுப்புவதில் அனைத்து மதத் தலைவர்களுக்கும் பெரும் பொறுப்பு உள்ளது. நம் எண்ணங்களில் கவனம் செலுத்தவேண்டும். அரசியல்வாதிகளின் எண்ணம் அதிகாரத்தைப் பெறுவதிலே உள்ளது. அந்தந்த இடங்களில் இருக்க வேண்டும் என்பதே மதத் தலைவர்களின் சிந்தனை. இதற்கெல்லாம் குறுக்குவழி இனவாதம் மற்றும் மதவாதமாகும். 1930 முதல் நம் நாட்டில் இது நடந்து வருகிறது. இறுதி முடிவு என்ன என்பதை நான் குறிப்பிடத் தேவையில்லை.

சிங்கப்பூரில் இனவாதமோ மதவாதமோ இல்லை. பல மொழிகள் பேசுவோர் இருந்தாலும், சிங்கப்பூர் இன்று துரித வளர்ச்சியை அடைந்துள்ளது.

தற்போது போர் இல்லாததால் நாட்டின் அரசியல் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணப்படுகின்றது. எனவே சகவாழ்வில் கவனம் செலுத்த வேண்டும். இதுபற்றி நாடாளுமன்றத்திலும் ஆராய்ந்து வருகிறோம். இலங்கையில் தேசிய மற்றும் மத சகவாழ்வை உறுதிப்படுத்தும் குழுவின் தலைவராக கரு ஜயசூரிய செயற்பட்டார்.

2018 மார்ச்சில் முஸ்லிம்கள் தொடர்பான மோதல்கள், 2017 இல் காலியில் இடம்பெற்ற மோதல்கள் மற்றும் 2014 இல் பேருவலயில் இடம்பெற்ற மோதல்கள் தொடர்பில் ஆராய மேற்படி குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக இந்தத் தெரிவுக் குழுக்களால் பல முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன. அந்த முன்மொழிவுகளை நாங்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டோம். நாங்கள் ஒரு குழுவாக இணைந்து பணியாற்றினோம். அப்படியானால், அந்த உடன்பாட்டின்படி நாம் நடக்கவேண்டும்.

கடந்த ஆண்டு இறுதியில் பல பௌத்த மதத் தலைவர்கள் மற்றும் தமிழ் தலைவர்கள் இமய மலைப் பிரகடனத்தை கையளித்தனர். அந்த அறிக்கையின் பிரகாரம் செயற்பட்டு வருகிறோம். தற்போது நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கான கடைசிப் பகுதியில் இருக்கிறோம். குறிப்பாக தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இது குறித்து ஆலோசித்து வருகிறோம்.

எஞ்சியுள்ள பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். காணாமற்போனோர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அது தொடர்பில் எதிர்வரும் காலங்களில் அறிவிப்போம். மேலும், சிறையில் இருந்த சிலரை விடுவிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காணாமல்போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதே இப்போதுள்ள பிரதான கேள்வியாகும். இதற்காக, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு (வீயூளீ) அமைப்பதற்கான சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றியுள்ளோம். காணாமல் போனோர் தொடர்பான ஆணைக்குழுக்களின் பல அறிக்கைகள் உள்ளன. அவை தொடர்பில் ஆராய்ந்து நீதிபதி ஏ.எச்.எம்.டி. நவாஸிடமிருந்து தனியொரு அறிக்கை பெறப்பட்டுள்ளது.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் வரைவை நாங்கள் நிறைவேற்றிய பின்னர், தென்னாபிரிக்க ஜனாதிபதி சிரில் ரமபோசா இந்த வேலைத் திட்டங்களுக்கு தனது ஆதரவை வழங்குவதாக அறிவித்தார். ஏனைய நாடுகளிடமிருந்தும் அதற்கான உதவிகள் கிடைக்கின்றன. அதற்கமையவே இந்த நடவடிக்கைகள் முன்னெடுக் கப்படுகின்றன.

அதன் பின்னர் அரசியல் பிரச்சினைகள் உள்ளன. காணிப் பிரச்சினையைத் தீர்ப்பது குறித்து கவனம் செலுத்தியுள்ளோம். யாழ்ப்பாணம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் வசிக்கும் கிராம மக்களுக்கும் வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. வவுனியா, திருகோணமலை, பொலன்னறுவை, மஹியங்கனை உள்ளிட்ட பிரதேசங்களிலும் இவ்வாறான பிரச்சினைகள் உள்ளன.

அனைத்து தரப்பினரையும் அழைத்து, இந்தப் பிரச்சனைகளுக்குத் தீர்வைத் தேட எதிர்பார்க்கிறோம். 1985 வரைவின்படி செயற்படுமாறு அறிவுறுத்தல்களை வழங்கியுள் ளேன். மேலும், அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் தமிழ் கட்சிப் பிரதிநிகளைச் சந்தித்து இது குறித்து கலந்துரையாடவுள்ளேன். பாதுகாப்புத் தரப்பினருடன் கலந்துரையாடியதன் பின்னர் மேலும் பல காணிகளை விடுவிக்க இணக்கம் தெரிவித்துள்ளனர். இதே முறையில் முன்னோக்கிச் செல்ல முடியும்.

அடுத்த பிரச்சினை அதிகாரப் பகிர்வு. அதற்குள் அதிகாரப் பகிர்வின் 3ஆவது பட்டியலின் அதிகாரங்களை வழங்குவதே இங்கு முதன்மையான கோரிக்கையாகும். பொலிஸ் அதிகாரத்தில் நாம் தலையிடப் போவதில்லை. அதனைப் பின்னர் பார்க்கலாம். காணிச் சட்டத்தை சமர்பிக்க வேண்டும். மேலும், 3ஆவது பட்டியலில் உள்ள மற்ற விடயங்களை வழங்குவதில் எமக்கு எவ்வித பிரச்சனையும் இல்லை. அதற்காக மற்றைய கட்சிகளுடன் கலந்துரையாடி நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

அதேவேளை, மாகாண கல்விச் சபையை நடைமுறைப்படுத்துவது குறித்தும் தற்போது கலந்துரையாடி வருகின்றோம். ஒவ்வொரு மாகாணத்திலும் மாகாண தொழில் பயிற்சி நிலையங்களை நிறுவ எதிர்பார்க்கிறோம். சுற்றுலா சபை, விவசாய நவீனமயப்படுத்தலுக்கான மாகாண மட்ட குழுக்களை நியமிக்கவும் எதிர்பார்க்கிறோம்.

அத்துடன், இருபது அமைச்சுகள் செய்ய வேண்டிய பணியை 05 மாகாண அமைச்சுக்களின் கீழ் செய்ய முயற்சிக்கிறோம். இதன்போது, சாதாரணமான முறையில் செயற்பட முடியாது. எனவே அதற்கேற்றவாறு முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்தவே முயற்சிக்கிறேன்.

அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்த பின்னர் வரவு செலவு திட்டத்தின் ஊடாகப் பன்முகப்படுத்தப்பட்ட நிதி தொடர்பிலான செயற்பாடுகளை முன்னெடுக்க எதிர்பார்க்கிறோம். அதேபோல் செனட் சபை தொடர்பிலான கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. அதனை எமது ஆட்சி புறக்கணிக்கவில்லை. ஆனால் புதிய அரசமைப்பு உருவாக்கப்படும்போதே அதனைச் செய்ய முடியும். அதற்காக சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்ல வேண்டிய அவசியமும் ஏற்படலாம். அது தொடர்பில் கட்சி தலைவர்களுடன் கலந்துரையாட எதிர்பார்க்கிறேன்.

அதனுடன் நாட்டுக்குள் புதிய சூழலைக் கட்டமைக்க வேண்டும். இந்த விடயத்தில் பெரும் பொறுப்புகள் மதத்தலைவர்களைச் சார்ந்துள்ளன. இந்த விடயங்கள் தொடர்பில் மேலும் கலந்துரையாடி சாத்தியமான பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என நம்புகிறேன் என்றார்.

## பொருளாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலாண்டுகளில் சாதகமான பொருளாதார வளர்ச்சியை எம்மால் அடைய முடிந்தது. ஆனால் 2018 ஆம் ஆண்டில் இருந்த பொருளாதார வளர்ச்சியை இன்னும் எட்ட முடியாதுள்ளது. அதற்கு இன்னும் இரண்டு வருடங்கள் தேவைப்படும்.

கடந்து வந்த பொருளாதார நெருக்கடியின் பின்னர் நாட்டின் பொருளாதாரத்தில் வளர்ச்சியை ஏற்படுத்தும் முதல் வருடம் இதுவாகும். அதற்காகப் பல கடினமாக தீர்மானங்களையும் எடுக்க வேண்டியிருந்தது.

அனைவரும் வாழக்கூடிய பொருளாதார சூழலை உருவாக்க வேண்டும். தற்போது பணத்தை அச்சிடவோ, கடன் வாங்கவோ முடியாது. அதனால், வரி சேகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ரூபாயை பலப்படுத்தி, பணவீக்கத்தைக் குறைப்பதே எமது இலக்காகும்.

பழைய பொருளாதார அடிப்படையில் நாட்டை முன்னேற்ற முடியாது. அதனால், நாட்டில் விரைவான பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். ஒரு புதிய பொருளாதார முறையில் நாடு கட்டியெழுப்ப வேண்டும். அதற்காக போட்டித்தன்மை நிறைந்த ஏற்றுமதிப் பொருளாதாரத்தை உருவாக்கவேண்டும். மேலும், ஆளும் தரப்பு என்ற வகையில் வர்த்தகர்களுக்கு முழுமையான ஆதரவை வழங்குவோம். அதற்காகவே 'பாராட்டே' சட்டத் திருத்தச் செயற்பாடுகளும் இவ்வருட இறுதி வரையில் ஒத்திவைக் கப்பட்டுள்ளன.

பெண் வர்த்தகர்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பைச் செய்கிறார்கள். இவர்களுக்கு தேவையான அனைத்து ஒத்துழைப்புக்களையும் ஆளும் தரப்பு வழங்கும்.

மேலும், பெண் தொழில் முனைவோரை ஊக்குவிப்பதற்காக உங்கள் சங்கத்தினால் மேற்கொள் ளப்படும் முயற்சிகள் பாராட்டுக் குரியது. பெண்களைவலுவூட்டுவதால் நாட்டின் பொருளாதாரத்தை கணிசமான அளவில் பலப்படுத்த முடியும். மேலும், பெண்களை தொழில்முனைவோராக மாற்றுவதற்கான விரிவான திட்டத்தை ஆளும் தரப்புச் செயல்படுத்தியுள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு பெண்களால் பெரும் பங்காற்ற முடியும். எனவே நாட்டின் பொருளாதார மாற்றத்திற்கு பெண்களின் பங்களிப்பு மிகவும் அவசியமானது. எதிர்காலத்தில் டிஜிட்டல், பசுமைப் பொருளாதாரத்திற்கு ஏற்றவாறு பெண் தொழில் முனைவோரை தயார்படுத்துவதற்கான திட்டத்தை ஆளும் தரப்புத் தயாரித்துள்ளது.

இன்று, பல பெண்கள் சிறிய, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். அதேபோல், நாட்டின் சுற்றுலாத் துறையும் கணிசமாக முன்னேற்றம் கண்டுள்ளது. அதற்கான அதிக வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் வலுவான தொழில்முனைவோரை உருவாக்க முடியும். சுற்றுலாத் துறையை சரியான முறையில் மேம்படுத்த வேண்டும். அதற்கான சேவைகளை வழங்கும் தொழில்முனைவோருக்கு ஆதரவளிக்க அரசாங்கம் தயாராக உள்ளது. சுற்றுலா வணிகத்தில் ஒருவரின் நாளாந்த வருமானம் குறைந்தபட்சம் 500 டொலர் வரையில் அதிகரிக்க வேண்டும். அந்த பொறுப்பு பெண் வர்த்தகர்கள் சங்கத்தையும் சார்ந்துள்ளது.

விவசாயத் துறையை நவீனமயமாக்க ஆளும் தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும், செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. எதிர்காலத்தில் இத்துறைசார் தொழில் முனைவோருக்கு அதிக கேள்வி இருக்கும். உலகம் தொழில்நுட்பத்துடன் முன்னேறும்போது, நாமும் அதற்கமையவே முன்னேற வேண்டும்.

நாம் ஒரே இடத்தில் நிற்க முடியாது. புதிய தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு மூலம் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான அடித்தளத்தை நாங்கள் ஏற்கனவே அமைத்துள்ளோம். அந்தச் செயற்பாட்டை தொடர்ச்சியாக முன்னெடுத்தால் இலங்கையின் பொருளாதாரத்தை உயர்மட்டத்திற்கு கொண்டுச்செய்ய முடியும்.

தற்போது மக்களின் காணி உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் காணி உறுதிப் பத்திரங்களை வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனால் காணி உரிமை பெற்றுகொள்ளும் 20 இலட்சம் பேரின் பங்களிப்பு நேரடியாக பொருளாதாரத்திற்கு கிடைக்கும். அதன்படி, விவசாய நவீனமயமாக்கல் முயற்சிகளுக்கும் அவர்களின் நேரடி பங்களிப்பைப் பெற முடியும். வலுவான பொருளாதாரத்தை கொண்ட இலங்கையை உருவாக்கும் நோக்கிலேயே இந்த அனைத்து வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன என்றார்.

# மரண அறிவித்தல்

பிறப்பு
29 . 06 . 1938



இறப்பு
27 . 02 . 2024

## கிளேடியஸ் புஸ்பராணி மதியாபரணன்

## இயேசுவின் திருக் கரங்களில் சரண்

எஸ்.எஸ்.மதியாபரணன் அவர்களின் அன்பு மனைவியும் சுமதி - ராஜன், சுமந்திரன் - சாவித்திரி ஆகியோரின் பாசமிகு தாயாருமான கிளேடியஸ் புஸ்பராணி 27.02.2024 அன்று இயேசுவின் திருக் கரங்களில் சரணடைந்தார். அன்னார் ஷாமந்தி, சஞ்சயன், ஷிலோ, ஷெக்கேம், ஷொலேம் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஏ.வி.ரூலில்லி பொன்னு (குடத்தனை, பருத்தித்துறை) தம்பதியினரின் அருமைமிகு புதல்வியும் காலஞ்சென்ற தேசி நல்லருளானந்தம், அலன் ஜெயராஜா (கனடா), சி.பி.ஜெயசிங்கம் (சிங்கப்பூர்), பீ.ஜெயசுந்தரனம் (ஜேர்மனி), புஷ்பசாந்தி பொன்னு ஆகியோரின் நேசமிக்க சகோதரியும் நல்லருளானந்தம், அலிஸ் தாமு (லண்டன்), மங்களநாயகி நவரட்ணராஜா (லண்டன்), எஸ்.எஸ்.பூரணம்பிள்ளை (அவுஸ்ரேலியா), ரதி ஜெயராஜா, ரூபினி ஜெயசிங்கம், ரஞ்சினி ஜெயசுந்தரம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 29.02.2024 (இன்று) வியாழக்கிழமை மு.ப.9 மணி முதல் இரவு 9 மணி வரையும் மீண்டும் வெள்ளிக்கிழமை மு.ப. 9 மணியிலிருந்தும் பொரள்ளை ஏ.எவ்.றேமன்ட் மலர்ச்சாலையில் பார்வைக்காக வைக்கப்பட்டு பி.ப. 4 மணி இறைவழிபாட்டின் பின்னர் பி.ப. 5 மணியளவில் பொரள்ளை, கனத்தை பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**

காலைக்கதிர் Kalaikkathir

# குரங்குகளின் தொல்லையால் பொதுமக்கள் பெரும் சிரமம்

(பாறுக் ஷிஹான்)

குரங்குகளின் தொல்லையால் நகர வர்த்தகர்கள் விவசாயிகள் பாதசாரிகள் பெரும் சிரமங்களை தினம் தோறும் முகம் கொடுத்து வருவதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

தினமும் கொத்தணியாக 300 இற்கும் மேற்பட்ட குரங்குகள் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடமாடிவருவதுடன் இவ்வாறு அதிகரித்து வருகின்ற குரங்குகளின் தொல்லையைக் கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டும் பொதுமக்களால் முன்வைக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் சவளக்கடை, நாவிதன்வெளி, நற்பிட்டிமுனை, மருதமுனை, சேனைக்குடியிருப்பு ,மணல்சேனை, பாண்டிருப்பு ,பெரியநீலாவணை, மத்தியமுகாம், சொறிக்கல்முனை, சம்மாந்துறை ,நிந்தவூர் ,அட்டாளைச்சேனை, அட்டப்பளம், ஒலுவில், வளத்தாபிட்டி, அக்கரைப்பற்று, தம்பிலுவில், பொத்துவில், இறக்காமம், பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் விதைப்பு மேற்கொள்ளப்பட்ட நெற்களை சேதப்படுத்துவதும் வியாபார கடைகளில் காட்சிபடுத்தப்பட்டுள்ள பொருள்களை நாசப்படுத்தி விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள பழங்களையும் உண்டு வீணாக்குவதாகவும் குற்றச்சாட்டுக்கள் அடுக்கடுக்காக முன்வைக்கப்படுகின்றன.

இது தவிர இம்மாவட்டத்தில் வீதிகளில் செல்கின்ற பாதசாரிகள் வாகனங்களின் போக்குவரத்தை குரங்கு கூட்டங்களாக வீதியின் நடுவில் சஞ்சாரம் செய்து தடுத்து வருகின்றன. இதனால் பல விபத்துக்களும் ஏற்பட்டுள்ளன.மேலும் இப்பிரதேச மக்கள் பொருட்களை எடுத்துசெல்லும் போது கைகளில் உள்ள உணவு பொதிகளை பிடுங்குவதாகவும் இதன் காரணமாக இப்பகுதி மக்கள் பல இடர்களை சந்திக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளை குரங்குகளின் அட்டகாசத்தால் பல பகுதிகளில் உள்ள மாணவர்கள் பல சிரமங்களுக்கு மத்தியில் கல்விகளை தொடர்ந்து வருகின்றனர்.அத்தோடு வீடுகளில் உடைகளை வெளியில் உலரவிடும் சந்தர்ப்பத்தில் குரங்குகள் அவற்றை கொண்டுசெல்வதால் பாடசாலை மாணவர்கள் உட்பட வீட்டில் உள்ள பெரியவர்களும் பல பிரச்சினைகளை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அம்பாறை மாவட்டத்தின் உகண தமன பொலிஸ் பிரிவுகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்கள் மற்றும் பஸ்களில் ஏறி குரங்குகள் அட்டகாசம் செய்வதால் வாகன சாரதிகள் மற்றும் பயணிகளும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.அம்பாறை மாவட்ட புற நகரங்களை அண்டிய மலைப்பிரதேசங்களில் மலைப்பாங்கான இடங்களில் காணப்படும் குரங்குகள் அடிக்கடி ஊருக்குள் வந்து தொல்லை கொடுப்பதாகத்; தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு குரங்குகளின் தொல்லையால் நகர வர்த்தகர்கள் விவசாயிகள் பாதசாரிகள் பெரும் சிரமங்களை தினம் தோறும் முகம் கொடுத்து வருவதுடன் 300இற்கும் மேற்பட்ட குரங்குகள் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடமாடுகின்றது.இவ்வாறு அதிகரித்து வருகின்ற குரங்குகளின் தொல்லையை கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



அத்துடன் இம்மாவட்டத்தில் குரங்குகளின் தொடர் அட்டகாசத்தால் பொறுமை இழந்த பல விவசாயிகள் விவசாயத்தை கைவிட்ட சந்தர்ப்பமும் உள்ளன.மேலும் ஒவ்வொருவருடமும் நேரடியாகவும் மறைமுகமாகவும் மில்லியன் கணக்கான ரூபாய் குரங்குகளினால் வீணாவதுடன் பலவிவசாய நிலங்கள் குரங்குகளின் நடமாட்டம் தொல்லை காரணமாக தரிசாக மாறியுள்ளது. இங்கு குரங்குகள் விவசாய நிலங்களில் உள்ள பயிர்களை உண்பதுடன் அதை முழுவதுமாக வீணாக்குவதும் இதற்கு பிரதான காரணமாகும். அதுமாத்திரமன்றி நகரங்களில்



முறையாக அகற்றப்படாத திண்மக்கழிவுகளை உண்டு அதிக எண்ணிக்கையில் குரங்குகள் பெருகி வருவதுடன் இதனால் விவசாய நிலத்தை பாதுகாப்பது சிரமமாக உள்ளதால் சில விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளை கைவிட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் பொதுவாக மலைப் பிரதேசங்களில் மலைப்பாங்கான இடங்களில் காணப்படும் குரங்குகள் ஊருக்குள் வந்து செல்வதுடன் வீதியோரங்களில் மட்டுமல்லாமல் சில சமயம் ஊருக்குள்ளும் வந்துவிடுகின்றன.இப்பகுதி மக்களின் பாதுகாப்பு நலன் கருதி பொலிஸ் நிலையம் மற்றும் வன அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்குமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.வீதியோரங்களில் மட்டுமல்லாமல் சில சமயம் ஊருக்குள்ளும் குரங்குகள் வந்துவிடுகின்றன.இப்பகுதி மக்களின் பாதுகாப்பு நலன் கருதி பொலிஸ் நிலையம் மற்றும் வன அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்குமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (05)

# அநுர பேஸ்புக் ஜனாதிபதி சஜித் வாய்ச்சவடால் வீரர்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சாட்டை



சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை தோற்கடித்து அரசாங்கத்தின் பலத்தை காட்ட இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

எனவே இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை உடனடியாக விவாதத்திற்கு உட்படுத்தப்பட வேண்டுமென அமைச்சர் தெரிவித்துள்ளார்.

களுத்துறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

களுத்துறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அதன் இணைத் தலைவர் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான்ன தலைமையில் நடைபெற்றது.

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளும் அதற்கு அமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு -

கேள்வி: தற்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ வெளிநாட்டில் இருக்கிறார். இந்த நாள்களில் ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவின் மறுசீரமைப்பு பணிகள் எவ்வாறு நடக்கின்றன...?

பதில் : கடந்த காலத்தில் பிஸியாக இருந்ததால் வெளிநாடு சென்றார். அவர் விரைவில் இலங்கைக்கு வருவார். இப்போதும் எமது அரசியல் வேலைத்திட்டம் கிராம மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அவர் வரும்போது கட்சியை பலப்படுத்தும் திட்டம் பரவலாக செயற்படுத்தப்படும்.

கேள்வி: நீங்கள் ஜனாதிபதி தேர்தலுக்கு தயாராகி வருகிறீர்களா..? பொதுத் தேர்தலுக்கா...?

பதில் : அடுத்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், இந்த ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு ஜனாதிபதித் தேர்தலுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக அண்மையில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெளிவாகக் கூறியது. இரண்டு வருடங்கள் இரண்டு தேசிய தேர்தல்கள். நாட்டு மக்கள் முடிவெடுக்க இது சிறந்த வாய்ப்பு. அரசமைப்புக்கு புறம்பாக எந்த நேரத்திலும் தேர்தலை ஒத்திவைக்க மாட்டோம்.

கேள்வி : சரியான நேரத்தில் தேர்தல் நடைபெறுமா? அல்லது மஹிந்தராஜபக்சபோன்று முன்னைய தேர்தல் ஒன்று நடைபெறுமா?

பதில் : முன் கூட்டியே நடத்த முடியும். அத்துடன் எந்த நேரத்திலும் வைக்க முடியும். நாட்டு மக்கள் அதற்கேற்ப செயற்படுவார்கள். முந்தி வைத்தாலும் சிறந்தது மற்றும் சரியான நேரத்தில் வைத்தாலும் சிறந்தது. அரசமைப்புக்கு புறம்பாக நாங்கள் செயற்படமாட்டோம் என்று கூறுகிறோம்.

கேள்வி : தற்போது இலங்கையில் வெற்றி பெறப்போவதாக இரண்டு ஜனாதிபதிகள் உள்ளனர். அப்போது பொதுஜன பெரமுனவுக்கு இடம் கிடைக்குமா...?

பதில் : பேஸ்புக் ஜனாதிபதியும் வாய்ச்சவடால் ஜனாதிபதியுமே தற்போது வாக்களிப்பின்றி வெற்றிபெற்றுள்ளனர். ஆனால், தேர்தலில் வெற்றி பெற்று ரணில் ஜனாதிபதியாவார். நாட்டின் நெருக்கடியான சூழ்நிலையில் சவால்களை ஏற்றுக்கொண்ட தலைவர் யார் என்பதை இந்நாட்டு மக்கள் புரிந்துகொண்டுள்ளனர். அதன்படி, நாட்டு மக்களின் கோரிக்கையே நாட்டின் சித்தாந்தமாகிறது. வரலாறு நெடுகிலும் மக்கள் ஜனாதிபதி தேர்தலில் ஒரு முக்கிய பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு வாக்களித்துள்ளனர். போரை முடிவுக்குக் கொண்டுவர மஹிந்தவைக் கொண்டு வந்தனர், அதை அவர் செய்தார். மஹிந்தவின் இரண்டாவது ஆட்சிக் காலத்தில் நாட்டை அபிவிருத்தி செய்யும்படி மக்கள் சொன்னார்கள். அதை அவர் செய்தார். நல்லாட்சியை ஏற்படுத்துவதற்காகவே மைத்திரிபால சிறிசேன கொண்டுவரப்பட்டார். அது நடந்ததா இல்லையா என்பதை இந்நாட்டு மக்கள் தீர்மானித்தனர். கோட்டாபய ராஜபக்ஷ தேசிய பாதுகாப்பை உருவாக்குவதற்காக கொண்டு வரப்பட்டார். அது நடந்ததா இல்லையா என்பதை மக்கள் முடிவு செய்வார்கள். இம்முறை பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்க இந்த முறையை மாற்றுவதாகக் கூறி அதை நிரூபித்த தலைவர். எனவேதான் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மீண்டுமொரு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென மக்கள் கருதுகின்றனர்.

கேள்வி : ரணில் விக்கிரமசிங்க தற்காலிக வருகையாளர் என்று தேசிய மக்கள் சக்தி கூறுகிறது. அவர் இந்த நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்று. நாட்டைக் கட்டியெழுப்ப தேசிய மக்கள் சக்தியே சிறந்தது என்கிறார்களே.

பதில் : தேசிய மக்கள் சக்தி என்பது மக்கள் கூட்டத்தைக் காட்டும் ஒரு நாடகம் மட்டுமே. நாங்கள் கூட்டத்தை காலிமுகத்திடலுக்கு கொண்டு வந்து காலிமுகத்திடலை நிரப்பினோம், மக்கள் தானாக முன்வந்து அங்கு வந்தனர். தொடர்ந்து நடந்த உள்ளூராட்சி தேர்தலில் 45 வீதம் வாக்குகள் கிடைத்தன. ஜனாதிபதி தேர்தலில் 51 வீதம் வாக்குகள் கிடைத்தன. அலை என்று ஒன்று இல்லை என்பதை புரிந்து கொள்ளுங்கள். 5 லட்சத்தை 50 லட்சமாக அதிகரிக்க 1000 சதவீதம் அதிகரிக்க வேண்டும். அரசியல் வரலாற்றில் அப்படிப்பட்டவர் யாரும் இல்லை. ஜே.வி.பி. பற்றி மக்களுக்கு நல்ல புரிதல் உள்ளது. கொலை செய்தாவது ஆட்சியைப் பிடிக்க விரும்புகிறார்கள். அதிகாரத்திற்காக அதிக அடக்குமுறைகளை அவர்களால் செய்ய முடியும். அதிகாரம் கிடைத்ததும் அடக்கி ஒடுக்குவேன். - என்றார்லால் காந்த. நிம்மதியாக வாழும் மக்கள் ஒருபோதும் ஜனதா விமுக்தி பெரமுனவுக்கு அதிகாரத்தைக் கொடுக்க மாட்டார்கள்.

கேள்வி : சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கைச்சாத்திடப்பட்டுள்ளது. அதை அரசு வெற்றி பெறுமா?

பதில் : அப்படிச் செய்வது நல்லது. அரசாங்கத்தின் பலத்தை காட்ட இது ஒரு சந்தர்ப்பம். அதனை விவாதத்திற்கு எடுத்து மிக விரைவில் வாக்கெடுப்புக்கு சென்றால் நாடாளுமன்றத்தில் தனது பலத்தைக் காட்ட முடியும்.

கேள்வி : பொதுஜன பெரமுன ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி பதவிக்கு முன்நிறுத்துமா?

பதில் : பொதுஜன பெரமுன அல்ல, வேட்பாளர்கள் யார் என்பது எங்களுக்குத் தெரியாது. ரணில் விக்கிரமசிங்க அதைக் கேட்பாரா இல்லையா என்பது எங்களுக்குத் தெரியாது. ரணில் விக்கிரமசிங்கவை இந்தநாட்டின் பிரதமராகவும் ஜனாதிபதியாகவும் ஆக்கியது பொதுஜனபெரமுன தான். அவர் பணியை சரியாக செய்ததை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். எனவே, மொட்டுக் கட்சியாக ரணில் விக்கிரமசிங்க வந்தால் நல்லது என நினைக்கின்றேன். சுயேச்சை வேட்பாளராக வந்தால் இன்னும் நல்லது. அப்போது பயமின்றி தெளிவாக வேலை செய்யலாம். - என்றார்.(05)

# நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையால் உயர்தர மாவணவர்களுக்கான விழிப்புணர்வு

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்ட செயலகத்தின் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையால் பாடசாலை மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையில் உயர்தர மற்றும் மாணவர் தலைவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி பாடசாலையின் அதிபர் எம்.ஐ ஜபீர் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது பாவனையாளர் உரிமைகள், பொறுப்புகள், சட்டங்கள், பாதுகாப்பு மற்றும் பொருள்கள் சேவைகளின் போது கவனிக்க வேண்டிய முக்கியமான விடயங்கள் மற்றும் தற்போதைய சந்தையில் பொருள்களின் அரசாங்க கட்டுப்பாட்டு விலை மற்றும் அதிகார சபையின் சட்ட திட்டங்கள் சம்பந்தமாக மாணவர்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இந்த விழிப்புணர்வு நிகழ்சிக்கு அதிதியாக சாய்ந்தமருது கோட்ட கல்விப் பணிப்பாளர் மலீக் கலந்து கொண்டார். இதில் பிரதான வளவாளராக அம்பாறை மாவட்ட நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் புலன் விசாரணை அதிகாரி இஷட்.எம் ஸாஜீத் மற்றும் புலன் விசாரணை அதிகாரி இஷட்.எம் ஸாஜீத்,எம்.எச்.எம் றிபாஜ் ஏ.பீ.எம் றிப்சாத், ஆகியோருடன் பாடசாலையின் ஆசிரியார்களும் கலந்து கொண்டனர். (05)





காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வெப்பத்தின் தாக்கமும் பேரிடரும்

இலங்கை தற்போது கடும் வெப்பத்துக்குள் சிக்கித் தகிக்கிறது. வெப்ப அலைகளின் தாக்கத்திற்கு உள்ளாகும் அபாயத்தையும் எதிர்கொள்கின்றது. வளிமண்டலவியல் திணைக்களம் தற்போதைய வறண்ட காலநிலையை சில மாதங்களுக்கு முன்னரே அறிவித்திருந்தது. அது தவிர இந்த நிலமையை எதிர்கொள்வதற்கு மக்களைத் தயார்ப்படுத்துவதில் ஆளும் தரப்போ அல்லது தனியார் துறையோ எந்த அக்கறையும் எடுக்கவில்லை. தற்போதைய வறட்சியான காலநிலையின் விளைவுகளைத் தணிக்கவோ அல்லது எதிர்கொள்ளவோ திட்டமிடவில்லை.

அதைவிட மோசமானது, வானிலை ஆய்வுத் துறை அதிகாரிகளும் 'வெப்ப அலை'யின் விளைவுகள் குறித்து கலவையான சமிக்ஞைகளை அனுப்புகிறார்கள். ஒருபுறம், சூரிய ஒளியைக் கட்டுப்படுத்துவதன் மூலம் பாதுகாப்பு நடவழக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர், அதிக அளவு திரவங்களை (தண்ணீர்) உட்கொள்ளவும் பரிந்துரைக்கப்படுகிறது,

மழை வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்பை எதிர்கொள்வதற்கும் அதற்கான இழப்பீடு மற்றும் உதவிகளை வழங்குவதற்கும் இடர் முகாமைத்துவ திணைக்களம் மூலம் ஏற்பாடு செய்யும் ஆளும் தரப்பு இந்த வெப்ப அலைத் தாக்கம் குறித்தோ வெப்பக் காலநிலையால் ஏற்படும் பாதிப்புக் குறித்தோ அவ்வாறான எந்தக் கரிசனையையும் காட்டுவதில்லை. அதை ஒரு இயற்கை இடராக அரசு கருதுவதேயில்லை என்பது வேதனை.

வெப்ப அலைகள் ஏற்படுத்தியிருக்கும் பாதிப்பைக் கணிப்பதற்கான குறிச்சுட்டிகள் எவையும் இலங்கையில் இல்லை என்பது பெரும் பரிதாபம். அதிக வெப்பம் காரணமாகப் பொது மக்களுக்கு சில பல தோல் நோய்கள் உட்பட உடல் பாதிப்புக்களும் ஏற்படுகின்றன. பல நோய்களைப் பற்றி மக்கள் முறையிடுகிறார்கள். ஆனால், அவையெல்லாம் யாருடைய செவிகளைச் சென்றடைந்து உதவிகள் கிடைக்கும் என்பதுதான் தெரியவில்லை.

மேலும் உடலுக்கு குளிர்ச்சியை அளிக்கும் விதவிதமான பழங்கள் மற்றும் காய்கறிகள் குறித்து பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டு வருகிறது. இருப்பினும், வருத்தமான விஷயம் என்னவென்றால், நம் நாட்டில் உள்ள பெரும்பாலான உழைக்கும் மக்கள் தங்கள் குடும்பங்களுக்கு ஒரு நாளைக்கு இரண்டு வேளை உணவைக் கூட வழங்க முடியாத நிலையில் இருக்கும்போது அவர்களால் வெப்பத்தைத் தணிக்க விலை உயர்ந்தபழங்களைஎப்படிப்பெற்றுக்கொள்ளமுடியும்என்பதுதான்.– தங்கள் குழந்தைகளின் உடலைக் குளிர்விக்க பழங்கள் மற்றும் காய்கறிகள் வாங்குவதை அவர்கள் சிந்தித்துக்கூடப் பார்க்க முடியாது என்பது ஆளும் தரப்பினருக்குத் தெரியாத ஒன்றல்ல. ஆனாலும் அது பற்றி அக்கறைப்பட்டதில்லை.

தற்போதைய வறண்ட காலநிலையானது நாட்டில் உள்ள நீர்த்தேக்கங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தத் தவறவில்லை. நீர்மின் உற்பத்திக்கான பெருந்தேக்கங்களில் நீர் மட்டம் இப்போதே குறையத் தொடங்கிவிட்டது என்று மின் உற்பத்தி சார்ந்தவர்கள் புலம்பத் தொடங்கிவிட்டார்கள். நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் அபாயகரமான வீதத்தில் வீழ்ச்சியடைந்து வருவதாக நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகளும் கவலை தெரிவிக்கின்றனர். என்றால், விவசாயமும் பாதிக்கப்படப் போகின்றது என்று பொருள்.

காலபோகம் மட்டுமல்ல இந்த அதிக வெப்பத்தால் தோட்டச் செய்கைகளும் அதிகம் பாதிக்கப்படுகின்றன. வழக்கத்தைவிட தண்ணீரின் தேவை இப்போது பயிர்களுக்கு அதிகமாகின்றது. அதனால் செலவும் அதிகமாகின்றது. விளைவு மரக்கறிகளின் விலையும் அதிகமாகின்றது. கடும் வறட்சி விவசாய உற்பத்தியின் அளவை மட்டுமல்ல அதன் தரத்தையும் மிக மோசமாகப் பாதிக்கின்றது.

எனவே வறட்சி பாதிப்பை குறைக்க முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். வறட்சிக்கு ஈடுகொடுக்கக்கூடிய விவசாய முறையையும் பாசன முறையையும் ஊக்குவிக்க வேண்டியிருக்கின்றது.

இலங்கையை விட்டு பிரிட்டிஷார் வெளியேறி 76 ஆண்டுகள் ஆகியும் வீணாகிப் போகும் மழை நீரைச் சேமித்து நீர் வளத்தைப் பெருக்கவும் வறட்சியை, அதிக வெப்பத்தை எதிர்கொள்ளவும் எம்மிடம் முறையான திட்டங்களும் இலக்குகளும் இல்லை. சவூதி அரேபியா, பாலஸ்தீனம், ஓமன், ஈரான் போன்ற நாடுகளில் கிழக்கு ஆசியாவில், நிலத்தடி நீரை அதிகரிப்பதன் மூலம் பெரிய ஏக்கர் பாலைவனங்கள் பழத்தோட்டங்களாகவும் காய்கறி தோட்டங்களாகவும் மாற்றப்பட்டுள்ளன. துரதிர்ஷ்டவசமாக, இரண்டு பருவமழைக் காலங்களிலும் ஏராளமாகக் கிடைக்கும் மழையைக் கூட நம்மால் சேகரித்துப் பாதுகாக்க முடியவில்லை.

நிலத்தடி நீர்நிலைகள் மூலம் பாலைவனத்தை பூக்கச் செய்ய முடிந்தால், இந்த நாடு எதிர்கொள்ளும் வறண்ட வானிலையின் காலநிலையைக் கடக்க, நிச்சயமாக வழி பிறக்கும். அதற்கு தேடலும் முயற்சியும் அவசியம். ஆளும் தரப்பினர் இதில் அதிக அக்கறை செலுத்தவேண்டும்.



# அச்சம் என்பது என்ன?

**கி.சேதுபதி**

'இந்தக் காலப் பிள்ளைகளுக்கு அச்சம் என்பதே இல்லாமல் போய்விட்டது' என்று தன் அருகில் இருந்தவரிடம் தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தினார் பெரியவர் ஒருவர். 'அச்சம் இல்லாமல் இருப்பது நல்லதுதானே' என்றார் அவர். 'அதற்காக அஞ்ச வேண்டியதற்கு அஞ்சாமல் இருந்தால் எப்படி' என்று பதில் கேள்வி எழுப்பினார். அவரின் பார்வை, நாங்கள் பயணம் செய்த ரயிலின் வாசற்பகுதியில் பதிந்திருந்தது.

ஓடத்தொடங்கிய ரயிலின் படிக்கட்டில் அவசரமாக ஓடி வந்த ஓர் இளைஞர் தொற்றிக் கொண்டார். அவரின் முதுகில் பெரிதாய்ப் பருத்த பொருட்பை தொற்றிக் கொண்டிருந்தது. கால் இடறினாலோ, கை நழுவினாலோ, பை எதிலும் சிக்கினாலோ என்னாவது என்ற பதற்றம் முன்னவரை விட்டபாடில்லை. பக்கத்தில் இருந்தவர், 'அந்த காலத்தில ஓடற பாம்பை மிதிக்கிற வயசு என்று சொல்வார்கள். இன்றைக்கு ஓடுற ரயிலைப் பிடிக்கிற வயசு' என்றார் சமாதானமாக.



சாகசம் புரிந்த புன்ன கையுடன் அந்த இளைஞர் எங்களைக் கடந்து உள்ளே போனார். இருவரும் அமைதியானார்கள். என்னால் முடியவில்லை. முன்னவர் சொல்லியதன் நியாயம் மனதைக் குடைந்தது.

'அச்சம் தவிர்' என்று மகாகவி பாரதியாரும், 'அச்சமே கீழ்களது ஆசாரம்' என்று திருவள்ளுவரும் 'அச்சமே மரணம்' என்று சுவாமி விவேகானந்தரும் சொல்லிய வாசகங்கள் என் மனதில் எழுந்தன. கூடவே, ஒருமுறைக்கு மும்முறை 'அச்சம் இல்லை அச்சம் இல்லை அச்சம் என்பதில்லையே' என்று ஆணித்தரமாக முழக்கமிட்ட மகாகவியின் பாடல் ஓங்கி நின்றது. எத்தனை மேடைகளில் நாமும் முழங்கியிருப்போம்.



ஆனால், பெரியவர் சுட்டிக் காட்டிய அச்சம் இது இல்லை என்பது தெளிவாகப் புரிந்தது. அசட்டுத்தனமான துணிச்சல் அச்சமின்மை ஆகாது. பொதுவிதிகளை மதிக்காமல், புறக்கணித்து அலட்சியமாக நடந்துகொள்ளும் போக்கு, அஞ்சாமை ஆகிவிடாது.

சர்க்கஸ் கூடாரங்களில் நடத்தப்படும் சாகசங்களுக்கும், பொழுதுபோக்கு நிகழ்வுகளில் செய்யப்படும் வியத்தகு செயல்களுக்கும் கடுமையான பயிற்சிகள் இருக்கின்றன; கட்டுப்பாடான நெறிமுறைகள் இருக்கின்றன. எதையும் அறியாது மனம்போன போக்கில், பின்விளைவு அறியாது முன்னெடுக்கும் எந்தச் செயலையும் அச்சமின்மை என்று சுட்டிவிடலாகாது.

இளையதலைமுறையினர், அஞ்சவேண்டியதற்கு அஞ்சாமல் இருப்பதும், அஞ்சக் கூடாததற்கு அஞ்சிநிற்பதும் ஆபத்தானது. அதற்கு அவர்கள் மட்டும்தான் காரணமா? அவர்களின் முன்னோடிகளான நாமும் தானே காரணம்? அச்சுறுத்த வேண்டிய கடமையை, தேவையை நிறைவேற்றக்கூட நம்மில் பலருக்கு அச்சம் இருக்கிறதே.

தப்பாக எடுத்துக்கொள்வார்களோ என்கிற தயக்கம்; தன்னம்பிக்கையைக் குறைத்துவிடும்படி ஆகிவிடுமோ என்கிற அச்சம்; ஊர் உலகத்தில் நடக்காததா என்ற சுயசமாதானம்; அனுபவத்தில் சரியாகிடுவார்கள் என்கிற அசட்டு நம்பிக்கை ஊ இவற்றையெல்லாம் உரமாகக் கொண்டு எழுகிற அறமீறல்கள் ஊ இளைஞர்களை மட்டுமல்ல, இன்றைய பெரியவர்களையும் பற்றியிருக்கின்றன என்பதோடு அவை எவை என்று பேசவும் கூட அச்சமாக இருக்கின்ற சூழல்.

இதனினும் அஞ்சத்தக்க நிலையில், வாழ்வில் ஒருமுறையே வரப்போகிற மரணத்திற்காக வாழ்நாள் முழுவதும் அஞ்சி அஞ்சிச் சாவது அவலம் என்பதை அமுதம் நிகர்த்த சொற்களில் நம் முன்னோர் உரைத்த அறமொழிகளின் நிறைபொருளை நாம் இன்னும் ஆழ உணர்ந்து கொள்ளவில்லையோ என்று தோன்றியது.

கண்டற்கெல்லாம் பயந்து நடுங்குகிற அச்சத்தை அறவே போக்கச் சொல்லியவர்கள் அவர்கள். சிப்பாயைக் கண்டும், ஊர்ச் சேவகனைக் கண்டும், துப்பாக்கி கொண்டு ஒருவன் தூரத்தே போவதைக் கண்டும் அஞ்சியவர்களைப் பார்த்து நெஞ்சுபொறுக்காமல் பாடிய

தொடர்ச்சி 5 ம் பக்கம்

# அச்சம் என்பது என்ன?

4ம் பக்க தொடர்ச்சி.....

பாரதியார் இளம்பிள்ளைகளுக்கு எடுத்துச் சொல்லிய அறமொழி, அவர் பாடிய புதிய ஆத்திசூடியின் முதல் மொழி, 'அச்சம் தவிர்'.

அச்சம் உயிரின் இயல்பு. ஆனால், அதனைத் தவிர்ப்பது அறிவின்செயற்பாடு. தவிர்க்கவேண்டிய இடத்தில்மட்டும்தான் அது தவிர்க்கப்பட வேண்டும், எல்லா இடங்களிலும் அல்ல என்பது அதன் உட்பொருள். மூர்க்கத்தனமான தன்முனைப்புடன் எல்லாவற்றையும் எதிர்த்து நிற்கிற தன்மையை இது சுட்டவில்லை. அப்படியான நிலைக்கு அவர்கள் போய்விடக் கூடாது என்பதால்தான் அடுத்த கட்டளையில், 'ஆண்மை தவறேல்' என்றார்.

ஆளுமை அனைவர்க்கும் பொது. அஞ்சாமை, ஆளுமையின்அடையாளம்தான்என்றாலும், அறமீறல்களை அஞ்சாது செய்வது கீழ்மை. அது செய்பவர்களை மட்டுமல்ல, அவர்கள் சார்ந்த சமூகத்தையும் கீழ்நோக்கிச் செலுத்தும். மேன்மையுடையவர்கள் அதனைச் செய்ய மாட்டார்கள். வாழ்க்கைப்போக்கில்நம்மைக்கீழேதள்ளிவிடும்அபத்தங்கள் நிறைந்த ஆபத்துக்களை எதிர்கொள்ளும்போதுதான் 'அச்சமில்லை' என்று விண்ணதிர முழக்கம் இட்டார் பாரதி. அந்தப் பாடல் தரும் பட்டியலை மீள எடுத்துப் படித்தால், அவை எவ்வளவு நுட்பமான இடங்கள் என்று புரிபடும். அதன்படி துணிகிற அஞ்சாமைதான், அச்சத்தைத் தவிர்க்கச் செய்கிற அறச்செயல்; மற்றவை அனைத்தும் அத்துமீறல்கள்.


அதனால்தான், மந்திரம் நிகர்த்த சொற்களில் அறம் உரைத்த திருவள்ளுவர், 'அஞ்சுவது அஞ்சாமை பேதைமை' என்றார். அஞ்சுவது அறியாமை அல்ல. அஞ்சத்தக்கவற்றிற்கு அஞ்சாமல் இருப்பதுதான் பேதைமை. எடுத்துரைக்கும் செய்தியை, யார் எதிர்த்தாலும், அஞ்சாமல் அவை முன்பு உரைக்க வேண்டும் என்பதற்காகவே, 'அவை அஞ்சாமை' என்ற அதிகாரம் படைத்த அவர், அஞ்ச வேண்டியவை எவை என்பதை விளக்குதற்கும் இரண்டு அதிகாரங்கள் படைத்திருக்கின்றார். ஒன்று தீவினை அச்சம்; மற்றொன்று இரவச்சம்.

தீய செயல்களுக்கு அஞ்சவேண்டும் என்று உரைப்பது தீவினை அச்சம். தீவினைக்கு மாற்றானது நல்வினை என்று எண்ணிவிடக்கூடாது. தீவினை நிகழ்ந்துவிடாது காப்பதே நல்வினையிலும் நல்ல வினை. நல்வினை ஆற்றாது விட்டால்கூடத் தீமையில்லை. தீவினை செய்தல் மட்டும் கூடாது. ஏனெனில், தீயை விடத் தீமையானது தீமை. தீ, தீண்டியவர்களுக்குத் தீமை பயப்பது; அதன் திறம் அறிந்து செயல்படுவார்க்கு ஆக்கமும் நல்குவது;ஆயினும் எச்சரிக்கையுடன் கையாளப்பட வேண்டியது. ஆனால், தீண்டாதபோதும் தீய பயப்பவை தீயவை. அவை தீயினும் அஞ்சத்தக்கவை என்று திருவள்ளுவர் எச்சரிக்கிறார்.

பொதுவான நிலையில் யாருக்கும் தீமை செய்கிற மனம் வந்துவிடாது. செயலின் விளைவால் ஏற்படுகிற நன்மை தீமையைப் பொறுத்து, பாதிக்கப்பட்டவர்கள் பழிவாங்கவேண்டும் என்றோ, பதிலுக்குச் செய்ய வேண்டும் என்றோ, உணர்ச்சிவசப்பட்டு செய்யத் துணிகிற செயலும், அவ்வாறு செய்ய வேண்டும் என்கிற எண்ணமும்தான் தீமை பயப்பதாகிவிடுகிறது. அச்சிந்தனையும் செயலும் மாந்தரைத் தீயவர்களாக் கிவிடுகின்றன.

அதன் உச்சநிலை அடுத்தவர்க ளுக்குத் தீங்கிழைத்து அவர்கள் துன்புறுவதைப் பார்த்துக் களிக்கிற குரூரம். அந்த நிலைக்குச் செல்லவிடாமல் காப்பது அறிவின் செயல். வறுமையின் காரணமாக, பகைமையின் காரணமாக, ஏன் குறும்புத்தனமான வேடிக்கைக்குக் கூட, தீவினை செய்வதோ நினைப்பதோ கூடவே கூடாது என்பதைப் பத்துக் குறட்பாக்களில் எடுத்துக்காட்டி, அச்சுறுத்தும் நிலையில் அறிவுறுத்துகிறார் திருவள்ளுவர்.

அவற்றின் உச்சம்,




**மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்**
**அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு**
(குறள்:204)

என்ற திருக்குறள்.

இது தனிமனித நிலையில் தொடங்கி, பொதுவாழ்வு வரைக்கும்நீண்டுவிடக்கூடாததீமை. இதனைமுன்வைக்கும் அதிகாரம் அறத்துப்பாலில் இடம்பெறுகிறது.

அடுத்த அச்சமோ, பொருட்பாலில் இடம்பெறுவது; பொருளை முன்னிறுத்தி எழுவது; இரந்து பெறுகிற பொருள் எத்துணை உயர்வானதாக இருந்தாலும் அது மிகவும் இழிந்தது என்பதை உரத்து எடுத்து உரைக்கும் அதிகாரம். எத்துணை வறுமை வந்தாலும், எவரிடத்தும் கையேந்தி யாசகம்பெறாத நிலை செம்மையினும் சிறந்தது. வறுமையிற் செம்மை உடைய அறிவுடையார் இத்தகு இழிதொழிலை எப்போதும் புரியமாட்டார்.

வள்ளல்களைச் சென்று பாடிப் பரிசு பெறத் தன் கவித்திறம் காட்டிய ஆன்றோர், அறம் பிறழ்ந்த மன்னர்களை அவையஞ்சாது எச்சரித்த சான்றோரும் ஆவர்; ஈயென இரத்தல் இழிவு என்று தெளிந்தவர்கள்; 'ஈயேன் என்றல் அதனினும் இழிந்தது' என்று துணிந்து சொன்னவர்கள்.

இந்த நிலையில்தான், துன்பம் காரணமாகவோ, வறுமை காரணமாகவோ பிறரிடத்தில் கையேந்தி யாசகம் கேட்பது கொடுமையிலும் கொடுமை என்று கூறுகிற திருவள்ளுவர், 'இருப்பதை மறைத்துக் கொண்டு இருப்பவர்களின் முன்னால், இருகையேந்தி யாசகம் கேட்பவர்களிடம் நான் யாசகம் கேட்கிறேன், 'இவர்களிடம் யாசகம் கேட்டு இரந்து நிற்காதீர்கள் என்று' என்கிறார்.

**இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்**
**கரப்பார் இரவன்மின் என்று**


(குறள்: 1067)

இவ்வாறு, இரத்தலை இழிவென்று உணர்த்தத் திருவள்ளுவரே இரந்து நிற்கிறார்ஊஅதுவும் இருப்பவர்களிடம் இல்லைஊஇல்லாவர்கள் முன்பு என்றால் அது எத்தகு அஞ்சத்தகு செயல்.

இன்றைக்கு எல்லா நிலைகளிலும் தயக்கமோ, அவமானமோ இன்றி இரந்து பெறுகிற இழிநிலைக்குப் பொதுவெளியில் இயங்குவது குறித்த அச்சம் நம்மிடம் இல்லை. தீமை கருதாத உள்ளம் அரிதினும் அரிதாகி வருகிறது. இந்த நிலை இன்னும் நீடிக்காதிருக்க, அஞ்சுவது அஞ்சுகிற அறிவின் செயல்பாடு நம் அனைவருக்கும் வேண்டும் என்கிற எண்ணம் வலுத்தது.

தொழில் அறிவு பெறக் கற்கும் கல்வியினும் மகத்தானது, பெற்ற அறிவினைத் தொழிற்படுத்தும் அறிவு.

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்ஹிந்த, இராவணா,
ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 390/=
Chikne Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cococola M - 70/=
Pepsi M - 70/=
Swahpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# சம்மாந்துறை பிரதேச சபையால் பாதையோர வியாபாரிகளை அகற்றும் பணி முன்னெடுப்பு



(தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசங்களில் பாதசாரிகளுக்கு பல்வேறு வழிகளிலும் இடையூறை ஏற்படுத்தி வருகின்ற பாதையோர அங்காடி வியாபாரிகளை அகற்றும் பணியில் சம்மாந்துறை பிரதேச சபை செவ்வாய் முதல் மேற்கொண்டு வருகின்றன.



சம்மாந்துறை பிரதேச மக்களின் கோரிக்கைக்கு அமைவாக சம்மாந்துறை நகரத்திலிருந்து அம்பாறை வீதி, மல்கம்பிட்டி வீதி பொலீஸ் வீதி மற்றும் கல்முனை வீதிகளின் இரு மருங்குகளிலும் தற்காலிக வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவோர்களால் பாதசாரிகள் மட்டுமல்லாது போக்குவரத்தில் ஈடுபடுகின்ற பல்வேறு வகையான வாகனங்களுக்கும் பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்தி வருவதுடன் வீதி விபத்துகளும் அதிகரித்து காணப்படுகின்றன.

இவ்வாறான ஆபத்துக்களில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்குடன் சம்மாந்துறை பிரதேச சபையின் செயலாளர் எம்.ஏ.கே முஹம்மட்டின் தலைமையில் கல்முனை வீதி அபிவிருத்தி





திணைக்கள உத்தியோகத்தர்கள், பொலீஸார், பொது சுகாதார பரிசோதகர்கள், பிரதேச சபை உத்தியோகத்தர்கள், வர்த்தக சங்கம் உள்ளிட்ட ஒன்றிணைந்த குழுவினரால் இனங்காணப்பட்ட தற்காலிக அங்காடி வியாபாரிகளை அகற்றும் பணியை மேற்கொண்டு வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

# கற்பிட்டி கோட்ட அதிபர்களின் சேவை நலன் பாராட்டு விழா!

(சியாஜ்)

கற்பிட்டி கோட்டமட்ட பாட சாலை அதிபர்களின் ஏற்பாட்டில் பாடசாலைகளில் இருந்து ஓய்வு பெற்றுள்ள அதிபர்கள் மற்றும் இவ்வருடம் ஓய்வு பெற உள்ள அதிபர்களின் சேவைநலன் பாராட்டு விழா செவ்வாய்க்கிழமை புத்தளம் வலயக்கல்வி பணிமனையின் பிரதிக் கல்வி பணிப்பாளர் திருமதி காஞ்சலதா மற்றும் கற்பிட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி தீப்தி பெர்னாண்டோ ஆகியோரின் தலைமையில் கொய்யாவாடியில் அமைந்துள்ள மின்ஹாஜ் விடுதியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் முன்னர் அதிபர் தரம் 01 தரம் பெற்ற ரோஸ்



புஹாரியின் சேவையை பாராட்டி கௌரவிக்கும் முகமாக புத்தளம் வலயக்கல்விப் பிரதி பணிப்பாளர், கற்பிட்டி கோட்டக் கல்வி பணிப்பாளர் மற்றும் தில்லையூர் பாடசாலையின் அதிபர் ஆகியோரால் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார் என்பதுடன் அவர் இவ்வருடம் அதிபர் சேவையில் இருந்து ஓய்வு பெற உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.(05)

# கிளி. கால்நடைகளுக்கு மீண்டும் பெரியம்மை நோய்த் தொற்று

கிளிநொச்சி மாவட்டத்தில் மீண்டும் கால்நடைகளுக்கு பெரியம்மை நோய் பரவ ஆரம்பித்துள்ளதாக கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி கண்டாவளை கால்நடை வைத்திய அதிகாரி பிரிவுக்குற்பட்ட கட்டைக்காடு தர்மபுரம் பகுதியில் இவற்றின் தாக்கத்தை அவதானிக்க முடிகிறது.

வைரஸ் நோயான இந்த நோய் வெப்பமான காலநிலையின் போது கால்நடைக்கு பரவி வருகிறது. கடந்த வருடமும் குறித்த நோயின் தாக்கம் கிளிநொச்சி மாவட்டம் அடங்களாக வடமாகாணம் மற்றும் தென் மாகாணங்களிலும் அதிகரித்திருந்தது .உணவில் நாட்டமின்மை, எழும்பி நடக்க முடியாத நிலை, தொப்பளங்கள் உருவாகி பெரிய காயங்கள் ஏற்படுதல் போன்றன இதன் அறிகுறிகள்



ஆகும். கண்டாவளை கால்நடை வைத்திய அதிகாரி வைத்தியர் மு.கஜரஞ்சன் அவர்களிடம் கேட்டபோது குறித்த நோய்க்கான தடுப்பூசி பதிவு செய்து பணம் செலுத்தி கால்நடை வளர்ப்பாளர்கள் பெற்றுக்கொள்ள முடியும் எனினும் பணம் செலுத்த வேண்டிய தேவையுள்ளதால் பண்ணையாளர்கள் பதிவு செய்து பெற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்ட வில்லை எனத் தெரிவித்தனர். (05-113)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் - பாரம்பரிய முறையிலான வாழ்க்கை - ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் - பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி - தியான மண்டபம் - மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் - உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் - பாரம்பரிய உணவகம் - பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் - யோகா நிலையம்
விருந்தினர் விடுதி - சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் - தாரா பண்ணை
பூங்கா - நடைபயிற்சிப் பாதை - உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி - விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

## பெரமுன....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குறிப்பிட்டுக் கொள்கிறார்.

பொருளாதார பாதிப்புக்கு நல்லாட்சிஅரசாங்கம்பொறுப்புக்கூற வேண்டும்என்பதில்எவ்விதமாற்றுக் கருத்துக்களும்கிடையாது.சர்வதேச பிணைமுறியங்களிடமிருந்து பெற்றுக்கொண்ட கடன்களினால் நாட்டின் நிதி நிலைமை நெருக்கடிக் குள்ளாக்கப்பட்டது.

கொவிட் பெருந்தொற்று தாக்கத்துக்கு மத்தியில்பொருளாதார பாதிப்பின் ஒட்டுமொத்த பொறுப்பும் ராஜபக்ஷர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது.பொருளாதார பாதிப்பு என்று குறிப்பிட்டுக்கொண்டுராஜபக்சகளை பலவீனப்படுத்தும் செயற்பாடுகள் மாத்திரமே முன்னெடுக்கப்பட்டன - என்றார்.

## வடக்கின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துணைத் தூதுவருக்கு தெளிவுப்படுத்தினார்.

வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி திட்டங்களுக்கு இந்திய அரசின் ஒத்துழைப்பு தொடர்ச்சியாக வழங்கப்படும் என புதிய இந்திய துணைத் தூதுவர் செவிதி சாய் முரளி தெரிவித்தார். இளைஞர், யுவதிகளுக்கான தொழில்நுட்ப பயிற்சிகளை பெற்றுக்கொடுக்கவும், தீவுகளுக்கான படகு சேவையை விரிவாக்கநடவடிக்கைஎடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கான வசதிகளை ஒழுங்கு செய்வதுடன், தரை மற்றும் கரையோர தூய்மை திட்டத்திற்கு தேவையான முழு ஒத்துழைப்பை வழங்குவதாகவும் புதிய இந்திய துணைத் தூதுவர் கூறினார். தூய்மை திட்டத்திற்கு தேவையான நிதியை இந்திய துணைத் தூதரகத்திலிருந்து ஒதுக்கவும் நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் உறுதியளித்தார்.

## மனிதநேயம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்ததாவது:

நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண வேண்டுமாயின் அரசியல் உறுதிப்பாடுஅவசியம்.அதற்குச்சகல தரப்பினரையும் ஒன்றிணைத்துப் பரந்துப்பட்ட அரசியல் கூட்டணி ஒன்று உருக்கப்படவேண்டும்.

மனிதநேயமிக்க அரசியல் கூட்டணி ஒன்றை உருவாக்குவதற்குச் சகல தரப்பினருடனும் பேச்சுநடத்திவருகின்றோம். ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளோம். நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகபெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபையுடன் கலந்துரை யாடலில் ஈடுபட்டோம்.

சகல தரப்பினுடன் பேச்சு நடத்தி பரந்துப்பட்ட அரசியல் கூட்டணியை உருவாக்குவதுதான் எமது பிரதான இலக்காகும். அரசியலில் கீரியும்,பாம்பும் போல் பல ஆண்டுகாலமாகப் பகைத்துக் கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும்,மஹிந்த ராஜபக்சவும் ஒன்றிணைந்துள்ளார்கள். இவர்களால் ஒன்றிணைய முடியுமாயின்ஏன்கொள்கைரீதியில் மாத்திரம் வேறுபாடு கொண்டுள்ள தரப்பினரால் ஒன்றுபட முடியாது.

சிறீ லங்கா பொது ஜன பெரமுனவை தவிர்த்து ஏனைய அரசியல்கட்சிகளைஒன்றிணைத்து பரந்துப்பட்ட அரசியல் கூட்டணியைவெகுவிரைவில்உருவாக்போம்.சகலதரப்பினரும்ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது என்றார்.

## சரியான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பு அண்மையில் நாடாளுமன்றத்தில் நடந்தது. இந்தச் சந்திப்பில் பாராளுமன்றப் பணியாட்தொகுதியின்பிரதானியும் பிரதிசெயலாளர்நாயகமுமானசமிந்த குலரத்னவும் கலந்துகொண்டார்.

நாடாளுமன்றத்தின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் தூதுவருக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா விளக்கமளித்தார் .

நல்லிணக்கம் தொடர்பிலும் இதன்போதுகலந்துரையாடப்பட்டது. அதற்கமைய தற்பொழுது இலங்கையில் சிறந்த வொரு நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டிய சபாநாயகர், அதனை மேலும் வலுப்படுத்தும்நோக்கில்செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

அதற்காக நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒற்றுமை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவும் பாராளுமன்றத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் இடம்பெறவிருக்கும் தேர்தல் தொடர்பிலும் இதன்போது கலாநிதி சிரி வோல்ட் சபாநாயகரிடம் கேட்டறிந்தார்.

கடந்த காலங்களில் மோசமான பொருளாதார நிலையில் இருந்த இலங்கைக்குஅதிலிருந்துமீள்வதற்கு சுவிஸ வழங்கிய உதவிகளுக்கு நன்றி தெரிவித்த சபாநாயகர் எதிர்காலத்திலும் அவ்வாறான உதவிகளை வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தில் இணைந்து இலங்கை சிறந்த பாதையில் பயணிப்பதாகச் சுட்டிக்காட்டிய கலாநிதி சிரி வோல்ட் அதன் மூலம் பொருளாதாரம், கல்வி, சுற்றுலா மற்றும் உட்கட்டமைப்பு ஆகிய துறைகளில் இலங்கை வளர்ச்சியும் அபிவிருத்தியும் அடைந்துள்ளதாகவும்தெரிவித்தார். அதற்கமைய எதிர்காலத்திலும் இலங்கைக்கு ஆதரவளிப்பதாக தூதுவர் கலாநிதி சிரி வோல்ட் சபாநாயகரிடம் தெரிவித்தார்.

## இந்தியாவிலேயே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற குரல் வலுத்தது. அதன் விளைவாக அவர் இலங்கை திரும்புவதற்கான ஆவணங்களை வழங்கஇலங்கைஅரசுமுன்வந்தது.

ஜனவரி 24 உடல் நிலை பாதிக்கப்பட்டதைத்தொடர்ந்துதிருச்சி அரசு மருத்துவமனையில் சாந்தன் சேர்க்கப்பட்டார். பின்னர் உயர் சிகிச்சைக்காகசென்னைராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார். எனினும் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார்.

சாந்தனின் இறுதி ஆசை நிறைவேற்றப்படாமல்போனமைக்கு இலங்கை இந்திய அரசுகள் மீது கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

## தவறான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறையீடுகள்மற்றும்ஆட்சேபனைகள் கிடைத்துள்ளன. அவைகளில் சுமார் 11,97,000 முறையீடுகள் தொடர்பில் இதுவரை பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.இந்தத்தொகைக்கு மேலதிகமாக,அஸ்வெசும உதவிகள் உண்மையிலேயே தகுதியான ஒரு குழுவினருக்கு கிடைக்கவில்லை. முதல்கட்ட விண்ணப்பத்தில் அவர்கள் விண்ணப்பப் படிவங் களை வழங்காததே அதற்குக் காரணம்.

அதன்படி, ஒன்லைன் ஊடாக மேற்கொண்ட பரந்த விழிப்புணர்வுக்குப்பிறகு 200,000 - 250,000 விண்ணப்பங்களைப் பெற்றுள்ளோம். இவ்வாறாகப் பிரதேசசெயலகங்களுக்குநேரடியாக வழங்கப்படும்விண்ணப்பப்படிவங்கள் தற்போது எமது மென்பொருளில் உள்வாங்கப்படுகின்றது. அதன்படி, இரண்டாம்கட்டவிண்ணப்பம்கோரல் 2024 மார்ச் 15 நிறைவடையும். விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்காத எவரும் அஸ்வெசும பலன்களைப்பெறதகுதிபெறமாட்டார்கள் என்பதை வலியுறுத்த வேண்டும்.

மேலும், புதிய விண்ணப்பதாரர்களின் தரவு சரிபார்ப்பு மற்றும் சான்றுப்படுத்தல்பணிநிறைவடைந்த பிறகு, 2024ஜூன்முதல்24இலட்சம் குடும்ப அலகுகளுக்கு அஸ்வெசும பயன்களை வழங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. அதன்படி, 2024ஆம் ஆண்டுக்கானஅஸ்வெசுமதொகைக்காக 205 பில்லியன் ரூபாவைச் செலவிட எதிர்பார்க்கிறோம். அதனுடைய ஒதுக்கீடுகள் தற்போது முடிவடைந்துள்ளன.

மேலும், இதுவரை கிடைத்த மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளையடுத்து சுமார் 7,000 பேர் அதிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தவறான தகவல்களைஅளித்துநன்மைகளை அடைந்துள்ளனர் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அவ்வாறான நபர்கள்பற்றியதகவல்களைபெற்றுக் கொண்டுள்ளோம்.அவர்களிடமிருந்து பணத்தைமீளப்பெறவும்அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் தயாராகி வருகிறோம் எனவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

# ஆழியவளை சி.சி.த.க. மெய்வன்மைப் போட்டி

யாழ். ஆழியவளை சி.சி.த.க. வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமைநடைபெறவுள்ளது.

பிற்பகல் 1.45 மணியளவில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் கந்தசாமி சிவனேசன் தலைமையில் இல்ல மெய்வல்லுநர் போட்டி ஆரம்பமாகின்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கணினிப் பொறியியலாளரும்டெக்கொரின்சொலூசன் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியுமானஅரியகுமார்சிறிகரன் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக மருதங்கேணி கோட்டக்கல்விப் பணிப்பாளர்செல்லத்துரைஸ்ரீஇராமச்சந்திரனும், கௌரவ விருந்தினர்களாக வடமராட்சி வலய உடற்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் கிருஷ்ணபிள்ளை பாக்கியநாதனும்,மு/செம்மலைமகா வித்தியாலய ஆசிரியர் வாரித்தம்பி பிரபாகரனும், பருத்தித்துறை பிரதேசசெயலகத்தின்பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் சரவணமுத்து சிதம்பரநாதனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்காக 247.7 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டுள்ளன.

மத்த மத்தள மஹிந்த ராஜபக்ச சர்வதேச விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்கு 247.7 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டுள்ளன.

அரச நிதியை கொண்டு அபிவிருத்தி நிர்மாண பணிகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் வெளிநாட்டு நன்கொடைகள் ஏதும் இந்த அபிவிருத்தி திட்டத்துக்கு கிடைக்கப்பெறவில்லை. எனினும் சீனாவின் எக்ஸிம் வங்கி மாத்திரம் 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை சலுகைக் கடனாக வழங்கியிருந்தது.2017 முதல்வரை ஒவ்வொரு வருடமும் இரண்டு பில்லியன் ரூபா இந்த விமான நிலையத்தால் நட்டம் ஏற்பட்டுள்ளது. 2017, 2018, 2019, 2020 ஆம் ஆண்டுகளில் இரண்டு பில்லியன்நட்டம்ஏற்பட்டாலும் 2021 ஆம் ஆண்டு சற்று முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

இந்த வருடத்தில் அந்த நட்டம் 1.1 பில்லியனாக குறைவடைந்துள்ளது என்று துறைமுகம், கப்பற்றுறை மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா கடந்த நவம்பர் மாதம் பாராளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பித்திருந்தார்.

மத்தள விமான நிலையத்தில் இருந்து கிடைக்கப்பெறும் வருமானத்தை காட்டிலும் அதனை நிர்வகிப்பதற்கு அதிக நிதி செலவிடப்படுவதால் மத்தள விமான நிலையத்தை ஒப்பந்தஅடிப்படையில்தனியார்மயப்படுத்ததீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார்.




காலைக்கதிர் Kalaikkathir

# தனியார் கல்வி நிலையங்களுக்கு ஞாயிறுகளில் விடுமுறை வழங்குக

## வவுனியாவில் ஆர்ப்பாட்டம்





ஞாயிற்றுக் கிழமைகளில் தனியார் கல்வி நிலையங்களிற்கு விடுமுறை வழங்கி அறநெறிக் கல்வியை ஊக்குவிக்குமாறு கோரி ஆர்ப்பாட்டம்



ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா, வைத்தியசாலை சுற்றுவட்டத்தில் உள்ள தொல்பொருள் திணைக்களத்திற்கு முன்பாக செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகிய குறித்த பேரணி வவுனியா மாவட்ட செயலகம் வரை சென்றடைந்தது. அங்கு மாவட்ட செயலாளருக்கு மகஜர் கையளிக்கப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் வகுப்புக்கள் இடம்பெறுவதால் அறநெறிக் கல்வியை பயில்வதற்கு மாணவர்களால் வருகைதர முடியாதுள்ளது. இதனால் சிறுபிள்ளைகள் உரிய வழிகாட்டல்கள் இன்றி தவறான வழியில் செல்வதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன.

எனவே ஞாயிற்றுகிழமைகளில் தனியார் கல்வி நிலையங்களை நிறுத்தி அன்றையதினம் அறநெறிக்கல்வியை போதிப்பதற்கு வழி ஏற்படுத்தி தருமாறு ஆர்பாட்டகார்களால் தெரிவிக்கப்பட்டது.

குறித்த ஆர்பாட்டத்தில் பௌத்த மதகுரு மற்றும் சிங்கள் மக்கள் பலரும் கலந்து கொண்டனர். (05 - 100)

# பூந்தோட்டத்தில் திறக்கப்படவுள்ள மதுபானசாலைக்கு மக்கள் எதிர்ப்பு

வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் புதிதாக மதுபானசாலை ஒன்று அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் அதற்கு பொதுமக்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

பூந்தோட்டம் பகுதி அதிகமான பொதுமக்கள் பயன்படுத்தும் பிரதேசமாக காணப்படுகின்றது. இந்நிலையில் ஏற்கனவே மதுபான நிலையம் ஒன்று அந்த பகுதியில் இயங்கி வருகின்றது. அதற்கு மேலதிகமாக பூந்தோட்டம் சந்தி பகுதியில் பிறிதொரு மதுபான நிலையம் அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் அதற்கு பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

ஏற்கனவே, ஒரு மதுபான நிலையம் இயங்கி வரும் நிலையில் மேலும் ஒரு மதுச்சாலையைத் திறப்பதால் கலாசார சீரழிவுகள் அதிகரிக்கும் நிலைமை காணப்படுவதுடன், அந்தபகுதியை பயன்படுத்தும் பொதுமக்களும் பல்வேறு அசௌகரியங்களை சந்திக்க வேண்டி ஏற்படும் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, குறித்த மதுபான நிலையம் அமைப்பதற்கு எதிராக பூந்தோட்டம் வர்த்தகர் சங்கம் தனது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளதுடன், அதற்கு அனுமதி வழங்கவேண்டாம் என்று கோரி மாவட்ட செயலாளர் மற்றும் பிரதேச செயலாளருக்கும் மகஜர் கையளித்துள்ளனர். (05 - 100)

# தமிழர் பாரம்பரிய வாழ்வியலும் உள்ளூர் சந்தையும் வவுனியாவில்





வவுனியாவில் பாரம்பரிய வாழ்வியலும் உள்ளூர் சந்தையும் என்னும் நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது.



வவுனியா, பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மருக்காரம்பளை கிராம அலுவலர் பிரிவில் உள்ள மணிபுரம் கிராமத்தில் இந்நிகழ்வு செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது.

மருக்காரம்பளை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோத்தர் என்.ஜெயராணி தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் தமிழர் பாரம்பரிய விளையாட்டுக்கள், நடனங்கள், வாழ்வியல் முறைகளை சித்திரிக்கும் நிகழ்வுகளும் இடம் பெற்று இருந்தன.

இதன்போது முன்பள்ளி மாணவர்களுக்கான சத்துணவு திட்டமும் ஆரம்பித்து வைக்கப் பட்டதோடு உள்ளூர் சந்தை யும் திறந்து வைக்கப்பட்டிருந்தது. குறித்த நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு. திலீபன், வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன், உட்பட சமுர்த்தி அதிகாரிகள், ஊர்ப் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு தமிழர் பாரம்பரியத்தை பார்த்து மகிழ்ந்தனர். (05 - 100)



# விரிவுரையாளர் ஜமால்தீனுக்கு பிரியாவிடை வழங்கியது தென்கிழக்கு பல்கலைக்கழகம்



(பாறுக் ஷிஹான்)

தென்கிழக்கு பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் கணக்கியல் துறையின் முதன்மை விரிவுரையாளர்களில் ஒருவரான விரிவுரையாளர் ஏ. ஜமால்தீன் கடந்த 19 ஆம் திகதி தனது பல்கலைக்கழக ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

விரிவுரையாளர் ஏ. ஜமால்தீனுக்கு பிரியாவிடை வழங்கும் நிகழ்வு வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் ஏற்பாட்டில் கணக்கியல் துறையின் தலைவர் பேராசிரியர் ஏ. ஹலிம் தலைமையில் பணியாளர் மேம்பாட்டு நிலையத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வுக்கு பிரதம அதிதியாக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கரும் கௌரவ அதிதியாக வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் பீடாதிபதி கலாநிதி எஸ். சபீனா எம்.ஜி.எச். அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

விரிவுரையாளர் ஏ. ஜமால்தீன், நிகழ்வுக்கு தனது குடும்ப உறுப்பினர்கள் சகிதம் வருகை தந்திருந்தார். அன்னவருக்கு பீடத்தின் கல்விசார் உத்தியோகத்தர்கள் முதல் கல்விசாரா உத்தியோகத்தர்கள் வரை பொன்னாடைகள் போர்த்தி ஞாபகசின்னங்கள் வழங்கி கௌரவித்தனர்.

விரிவுரையாளர் ஏ. ஜமால்தீன் தனது ஆரம்பகால பல்கலைக்கழக சேவையை பல்கலைக் கழக கல்லூரியில் தொடங்கி, தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் ஆரம்ப உருவாக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டு, பின்னாளில் வர்த்தக முகாமைத்துவ பீடத்தில் நிரந்தர விரிவுரையாளராக 15.11.1996 ஆந் திகதி முதல் தன்னை பல்கலைக்கழக சேவையில் இணைத்துக் கொண்டார்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் 27 வருடங்களுக்கு மேலாக தனது அளப்பெரிய ஆசிரியப் பணியை சிறப்பாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் மேற்கொண்டு பல்வேறுபட்ட மாணவச் செல்வங்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டிய ஒரு பெருந்தகை இவர்.

பல்கலைக்கழகத்தின் உருவாக்கத்தின் ஆரம்பகாலத்தில் மிகவும் சுறுசுறுப்பாக இயங்கி இன்றைய எமது பல்கலைக்கழகத்தின் உயர்வு நிலைக்கு அர்ப்பணித்து பாடுபட்டவர்களில் இவரும் பிரதானமானவராகக் கருதப்பட்டவர்.

தனது சேவைக் காலத்தில் பல்வேறு பட்ட மாணவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் சார்பான நிகழ்ச்சி திட்டங்களை பல்கலைக்கழகத்தில் முன்னெடுத்துச் சென்றவர். அதிலும் குறிப்பாக பல்கலைக்கழகத்தின் தொழில் வள ஆலோசனை நிலையத்தின் பணிப்பாளராகவும் பணியாளர் மேம்பாட்டு நிலைய பணிப்பாளராகவும் திறம்பட கடமையாற்றியவர்.

தன்னிடம் கற்ற மாணவர்கள் இன்று சர்வதேச மற்றும் நாடளாவிய ரீதியில் பல்வேறுபட்ட உயர் பதவிகள் மற்றும் நிர்வாக துறைகளில் மேலோங்கி இருந்த போதிலும் ஏன் அதே பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள் என பல்வேறுபட்ட உயர் நிலையில் தங்களை நிலை நிறுத்திக் கொண்ட போதிலும் அவர்களைப் பார்த்து பெருமிதம் கொள்பவர் இவர்.

தான் பல்கலைக்கழகத்தில் சேவையாற்றிய காலம் வரையில் அனைத்து தரப்பினருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகிக்கொண்ட இவர் மாணவர்களுக்கு நல்ல ஆசனாகவும் தன்னோடு கடமையாற்றிய சக உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனைகள் பல கூறக்கூடிய நல்ல நண்பனாகவும் மற்றவர்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் தனது கடமைகளை நிறைவேற்றியவர்.

சமூக ரீதியாக பல்வேறுபட்ட அபிவிருத்தி திட்டங்களையும் குறிப்பாக நிந்தவூர் பிரதேசம் சார் வேலை திட்டங்கள் பலவற்றில் தன்னை அர்ப்பணித்து செயலாற்றியவர் இவர், நல்ல கணவனாக நல்ல தந்தையாக தனது குடும்பத்தையும் தனது குழந்தைகளையும் தன்னிடம் கற்ற மாணவர்களையும் நெறிப்படுத்தியதற்கு இன்றைய அவர்களின் வாழ்வியல் உயர்வுகள் சான்றாக அமைகின்றன.



நிகழ்வின்போது விரிவுரையாளர் ஏ. ஜமால்தீன் அவர்கள் தொடர்பில் அவருடன் இணைந்து பயணித்தவர்கள் தங்களது உள்ளக்கிடக்கைகளை அவிழ்த்து விட்டனர்.



நூலகர் எம்.எம். றிபாஉடீன், பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர் உள்ளிட்டவர்களுடன் வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் பேராசிரியர்கள், சிரேஷ்ட, கனிஷ்ட விரிவுரையாளர்கள், பிரதி பதிவாளர் பி.எம். முபீன் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்களும் ஜமால்தீன் அவர்களது குடும்ப உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இங்கு விரிவுரையாளர் ஏ. ஜமால்தீன் தொடர்பில் விவரணப்படம் ஒன்றும் காண்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் சாவு

அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹன்போல்ட் பிரிவு கிலனிகல்ஸ் தோட்டத்தில் மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் நேற்று அதிகாலை உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் காலனிகளில் தோட்டத்தை சேர்ந்த மதுரைவீரன்நாகராஜ்(வயது56)என அடையாளம் காணப்பட்டுள்ளதாக அக்கரப்பத்தனை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

தேயிலை தோட்டத்துடன் இணைந்த விவசாயம் செய்து வந்த குறித்த நபர் காட்டு மிருகங்கள் வருவதை தடுக்க சட்ட விரோதமாக பாய்ச்சப்பட்டுள்ள மின்சாரத்தில் சிக்கி உயிரிழந்துள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

அதேநேரத்தில் சம்பவத்தில் உயிரிழந்த குடும்பஸ்தரின் பக்கத்து வீட்டு காரர் பராமரித்து வரும் விவசாய காணிக்கு சட்ட விரோதமாக மின்சாரம் பாய்ச்சியுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

மேலும், மின்சாரம் தாக்கி உயிரிழந்த நபர் அதிகாலையில் குறித்த காணியின் பகுதிக்கு ஏன், எதற்காக சென்றார் என்பது தொடர்பில் விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அதே நேரத்தில் உயிரிழந்த நபரின் சடலம் சம்பவ இடத்தில் வைக்கப்பட்டுள்ள நிலையில், சம்பவ இடத்திற்கு நீதவான் வருகை தந்து பார்வையிட்டு மரண விசாரணை செய்த பின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# நினைவு நூல் வெளியீடு

வைத்தியர் விக்கினேஸ்வராவின் ஈராண்டு நினைவாக 'கலாநிதி த.கலாமணி அணிந்துரைகள்' வெளிவருகிறது.

சுன்னாகம் புகழ் வைத்தியர் ப. விக்கினேஸ்வரா மண்பயனுறச் சேவை நல்கிய மக்கள் மருத்துவர் ஆவார். இடர்காலத்தில் அவர் நல்கிய மருத்துவப்பணிகளையாழ்ப்பாணம் மண்ணும், மக்களும் என்றும் நினைவில் கொள்வர்.

சுன்னாகத்தில் நாற்பது ஆண்டுகள் மருத்துவ பணியாற்றிய வைத்தியர் ப. விக்கினேஸ்வரா அமரராகி இருவருடமாகிறது. ஆனால் அவரிடம் சிகிச்சை பெற்ற மக்கள் இன்றும் அவரது திறமைகளையும், சேவைகளையும் புகழ்ந்து நினைவு கூருகின்றனர்.

ஜீவநதி பதிப்பகத்தின் 332 ஆவது வெளியீடாக, பிரபல வைத்தியரும் இடர்காலத்தில் மண் பயனுறச் சேவை நல்கிய மக்கள் மருத்துவர் சுன்னாகம் டாக்டர் விக்கினேஸ்வராவின் ஈராண்டு நினைவாக,'கலாநிதி த.கலாமணி அணிந்துரைகள்' வெளிவருகின்றன. ஒவ்வொரு வருடமும் வைத்தியர் ப.விக்கினேஸ்வரா நினைவாக ஈழத்து எழுத்தாளர்களின் நூல்கள் வெளியிடப்பட்டு வருகின்றமை அறிந்ததே. 2022 இல் மறைந்த வைத்தியர்டிப.விக்கினேஸ்வராவின் 31ஆம் நாள் நினைவாக பேராசிரியர் பாலசுகுமார் எழுதிய 'ஈழத்தில் மாட்டு வண்டிச் சவாரியும் தமிழர் மரபும்' எனும் நூல் வெளியானது.

இதன்பின் கடந்த வருடம் 2023 இல் டாக்டர் ப.விக்கினேஸ்வராவின் முதலாவது ஆண்டு நினைவாக ஈழத்தின் பிரபல்ய எழுத்தாளர் தீபச்செல்வன் எழுதிய 'பள்ளிக் கூடங்கள் கட்டடக்கூடுகள் அல்ல' எனும் கல்வியியல் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியிடப்பட்டது.

இவ்வருடம் வைத்தியர் விக்கி னேஸ்வரா ஈராண்டு நினைவாக கலாநிதி த.கலாமணியால் எழுதப் பெற்ற 35 படைப்பாளர்களின் நூல்களுக்கான அணிந்துரைகளின் தொகுப்பு நூலான 'கலாநிதி த.கலா மணி அணிந்துரைகள்' எனும் நூல் தற்போது வெளிவருகின்றமை குறிப்பிடத் தக்கது. (05)



# நிந்தவூர் மடத்தடி மீனாட்சி அம்மனுக்கு 80 லட்சம் ரூபா செலவில் இரண்டு ஏக்கர் வயல் காணிகள் கொள்வனவு



(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற நிந்தவூர் மடத்தடி ஸ்ரீமீனாட்சி அம்மன் ஆலயத்திற்கு 80 லட்சம் ரூபா செலவில் இரண்டு ஏக்கர் வயல்காணிகொள்வனவுசெய்யப்பட்டுள்ளது.

ஆலயத்தின்முதலாவதுகும்பாபிஷேகத்தின் போது ஊர் ஊராய் சேகரித்த பணத்தில் கும்பாபிஷேகம் முடிந்த பிற்பாடு எஞ்சிய 80 லட்ச ரூபா நிதியில் இக் காணி கொள்வனவு செய்யப்பட்டது .

இந்த காணி உரிமை பத்திரம் கைம் மாறுகின்ற நிகழ்வு கல்முனை பிரபல சட்டத்தரணி நடராஜா சிவரஞ்சித் முன்னிலையில் நடைபெற்றது .

ஆலய பரிபாலன சபையின் தலைவர் கி.ஜெயசிறில், பரிபாலன சபையின் ஆலோசகர் வி.ரி.சகாதேவராஜா, செயலாளர் த.சண்முநாதன், பொருளாளர் அ.சுந்தரராஜன், உபதலைவர்களான கே.சண்முகநாதன், ரி.நேமிநாதன் உள்ளிட்ட சபை உறுப்பினர்கள் முன்னிலையில் காணி பத்திரம் கைம்மாறப்பட்டது .

காரைதீவு பிரதான வீதியில் விபுலானந்தா முச்சந்தி அருகில் உள்ள திரு திருமதி வேற்குமரன்நிஷாந்தினிதம்பதியினரிடமிருந்து இக் காணி கைமாறப்பட்டது.

எஞ்சியநிதியைஇவ்வாறுநிரந்தரசொத்தாக சேர்த்த நிருவாகத்தினரின் முன்மாதிரி பக்தர்கள் பொதுமக்கள் மத்தியில் பெரு வரவேற்பு பெற்று இருக்கின்றது . பாராட்டும் தெரிவிக்கப்பட்டுவருகிறது.

இக்காட்சி அம்மனுக்குநிலையானசொத்து என்பதோடு அதிலிருந்து வருகின்ற குத்தகை பணம் மாதா மாதம் அம்மனுக்குரிய பூஜை செலவுகள்ஏனையசெலவுகளுக்குபயன்படும் வண்ணம் இதுஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முதன் முதலில் 2022 இல் இடம்பெற்ற கும்பாபிஷேகத்திற்காகஅம்பாறைமாவட்டத்தின் ஆறு பிரதான தமிழ் கிராமங்களுக்கு சென்று நிதி சேகரிப்பு செய்தபோது சுமார் 2 கோடி ரூபா நிதியை மக்கள் வாரி வழங்கினார்கள்.

கும்பாபிஷேக சங்காபிஷேகம் ஏனைய செலவுகள் நிறைவடைந்ததும் எஞ்சியிருந்த 80 லட்சம் ரூபாவை அம்மனுக்கு சொத்தாக்கி இருப்பது பெரும் வரவேற்பைப் பெற்றது. (05)

# கல்முனை மாநகர சபையில் ஒன்லைன் முறை அறிமுகம்



(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனைமாநகரசபைக்கானகொடுப்பனவுகளை





இணையவழிஒன்லைன்மூலம்செலுத்துவதற்கான வசதி செவ்வாய்க்கிழமை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

கல்முனை மாநகர சபையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற நிதி மோசடிகளைக் கருத்தில் கொண்டு, நிதிப் பிரிவை ஒழுங்குமுறைப்படுத்தி, மோசடிகளை முற்றாகத் தவிர்க்கும் வகையில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு மற்றும் கிழக்கு மாகாண சபை என்பவற்றின் அங்கீகாரம் பெற்ற வயம்ப அபிவிருத்தி அதிகார சபையின் யூ.என்.டி.பி. நிறுவனத்தின் அனுசரணையுடன் சில மாதங்களுக்கு முன்னர் இங்கு அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.

ஒரே கூரையின் கீழ் சேவைகளை வழங்கும் முகப்பு அலுவவலகத்தில் ஏற்படுத்தப்பட்ட மேற்படி முறைமையின் ஓர் அங்கமாகவே ஒன்லைன் மூலமாக கொடுப்பனவுகளை செலுத்தும் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது கல்முனை மாநகர சபைக்குட்பட்ட வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளர்கள் பலர் நிகழ்வில் கலந்து கொண்டு குறித்த ஒன்லைன் மூலமான கொடுப்பனவு முறைமையை செயற்படுத்துவது தொடர்பிலான ஆலோசனை, வழிகாட்டல்களை பெற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்வில் கல்முனை மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌஸி, கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ், ரிஎன்டிபி நிறுவனத்தின் கிழக்கு மாகாண திட்ட இணைப்பாளர் ஷாமில் சாலிஹ் உட்பட வயம்ப அபிவிருத்தி அதிகார சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் மாநகர சபையின் பிரிவுத் தலைவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களும் பங்கேறிருந்தனர்.

இந்த ஒன்லைன் முறை மூலம் கல்முனை மாநகர சபைக்குரிய சோலை வரி உள்ளிட்ட சேவைக் கட்டணங்களை பொது மக்கள் மாநகர சபைக்கு வராமலேயே இணையத்தளத்தினுள் பிரவேசிப்பதன் மூலம் ஒன்லைன் ஊடாக இலகுவாக செலுத்திக் கொள்ள முடியும்.

இது சம்மந்தமான மேலதிக விவரங்கள் தேவைப்படுவோர் முகப்பு அலுவலகத்தின் 0672059546 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்படுகிறது. (05)

# கந்தராய் சூரியபுர பகுதியில் வாகனம் மோதி ஒருவர் சாவு

(கிண்ணியா நிருபர் )

கந்தளாய் சூரியபுர பகுதியில் வாகனங்கள் விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் செவ்வாய்க்கிழமை பகல் இடம் பெற்றுள்ளது. சூரியபுர பகுதியில் இருந்து கந்தளாய் நோக்கிவந்தமோட்டார்சைக்கிளும்கந்தளாயிலிருந்து சேருநுவர நோக்கி பயணித்த டிப்பர் வாகனமும் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என சூரியபுர பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய் ரஜஎல பகுதியைச் சேர்ந்த 60 வயதுடைய ஜி.ஜி.ஆரியபால என்ற மூன்று பிள்ளைகளின்தந்தையேஇவ்வாறுஉயிரிழந்துள்ளார்.

இவர் தனது வயலில் வேலை செய்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த போது சூரியபுர 11 மைல் போஸ்ட் அருகே விபத்துக்குள்ளானார்.

டிப்பர் சாரதி கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சூரியபுரபொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர். (05)

# சர்வதேச தாய்மொழி தினம் களுவாஞ்சிக்குடியில்நடந்தது



(வி.ரி.சகாதேவராஜா)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேசசெயலகம்சர்வதேசதாய்மொழி தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்த சர்வதேச தாய்மொழி தின நிகழ்வு பிரதேசசெயலாளர்திருமதிசிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது .



தாய்மொழிக்காகபோராடிஉயிரிழந்தவர்களை நினைவுகூறி, உலகின் அனைத்து மக்களின் தாய்மொழி உரிமையை பாதுகாக்கும் வகையில் பெப்ரவரி 21ஆம் திகதியை சர்வதேச தாய்மொழி தினமாக ஐ.நாவின் யுனெஸ்கோ 1999 ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தியது.

இதனையடுத்து 2000 ஆம் ஆண்டிலிருந்து பெப்ரவரி 21ஆம் திகதியை சர்வதேச தாய்மொழி தினமாக கொண்டாடப்படுகின்றது.

'நமது தாய்மொழியை நினைத்து நாம் பெருமிதம் அடையலாம். ஆனால் இன்னுமொருவருடைய மொழியைசிறுமைப்படுத்துவதுமனித அறமாகாது' என்பது தாய்மொழிகள் தினம் சொல்லும் செய்தி.

இதன்போது 'நம் தாய்மொழியை பேணுதல் ஒரு பன்முக நோக்கு' எனும் தலைப்பின் கீழ் தென்கிழக்கு பல்கலைக்கழக பிரதி பதிவாளர் த. சஞ்சீவி சிவகுமாரால் சிறப்புரை நிகழ்த்தப்பட்டது.

பிரதேசகலைஞர்களின் பாடல்கள் மற்றும் கணேஷா கலைக்கழக மாணவர்களின் நடன நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந் நிகழ்வில் கதிரவன் பட்டிமன்ற பேரவை வழங்கிய 126 ஆவது சிறப்பு பட்டிமன்றம்'தற்காலத்தில்தமிழ்மொழி வளர்கிறது......தற்காலத்தில் தமிழ்மொழி தளர்கிறது' எனும் தலைப்பில் இடம்பெற்றமை விசேட அம்சமாகும்.





இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன், பிரதேச செயலக பதவிநிலைஉத்தியோகத்தர்கள்மற்றும் அலுவல உத்தியோகத்தர்கள், பிரதேச மூத்த எழுத்தாளர்கள், மாணவர்கள் எனப்பலரும்கலந்துகொண்டனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# மாணவர்களையும் அவர்களுக்குக் கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டி கௌரவித்தல்



(எம்.எப்.றிபாஸ்)


அக்கரைப்பற்று கல்வி வலயத்திற்குட்பட்ட அட்டாளைச்சேனை அக். நிலாமியா ஜுனியர் பாடசாலையின் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரிட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும். ஆசிரியர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் எம்.எப்.நழிம் தலைமையில் அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

'மணி மகுடம் சூடும் நிலாமியாவின் நித்திலங்கள்' எனும் தலைப்பில் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரை புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்களையும் அவர்களுக்கு. கற்பித்த ஆசிரியர்களையும் கௌரவிக்கும் இந் நிகழ்வுக்கு அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ், பிரதம அதிதியாகவும் முன்னாள் ஓய்வு பெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.எல்.எம்.காசிம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ்.அஹமட் கியாஸ் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், பாடசாலையின் அபிவிருத்திச் சங்க செயலாளர் சட்டத்தரணி ஐ.முனாஸ், முன்னாள் அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் ஏ.சி.இமாமுத்தீன் நிலாமியா பௌண்டேஷன் தலைவர் ஏ.ஜி.முபாறக் உட்பட பெற்றோர்கள் மற்றும் நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர். (05)



## சாந்தனின் இறப்பு ஒரு கொலை

### சீமான் ஆசேவம்



ராஜீவ் கொலை வழக்கு குற்றவாளியான சாந்தனின் இறப்பு ஒரு கொலை இதனை ஒரு சட்டப்படி இடம்பெற்ற கொலை என்றுதான் தெரிவிக்கவேண்டும் என சாந்தனின் மரணம் குறித்து நாம்தமிழர் கட்சியின் தலைவர் சீமான் தெரிவித்துள்ளார்

சாந்தனின் உடலிற்கு அஞ்சலி செலுத்திய பின்னர் கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

சிறப்பு முகாம் என்றால் அது சிறப்பு முகாம் ஆகிவிடுமா அது ஒரு வதைமுகாம் என சீமான் தெரிவித்துள்ளார்.

அதில் போய் சாந்தனை அடைத்துவைத்திருந்தார்கள் இரத்தஉறவுகள் தவிர வேறு யாரும் அங்கு அடைத்துவைக்கப்பட்டுள்ளவர்களை மனுக்கொடுத்து பார்க்கமுடியாது நான் கூட மனுகொடுத்து போய்பார்க்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நீங்கள் இங்கு வைத்து விடுதலை செய்யவில்லை என்றால் பொதுச் சிறையிலாவது அடைத்துவையுங்கள் எனக் கேட்டோம்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை வழங்கப்பட்டு விடுதலைசெய்யப்பட்ட பேரறிவாளன் நளினி போன்றவர்கள் வெளியே உள்ளனர். அவர்களால் இந்த நாட்டில் சட்டமொழுங்கு பாதிக்கப்பட்டதாக என கேள்வி எழுப்பியுள்ள சீமான் எங்கு இருக்கின்றார்கள் என்பது தெரியாத நிலையில் அவர்கள் வாழ்ந்து வருகின்றனர். நாங்கள் அவர்கள் தாய்தந்தையிடம் கேட்கவேண்டும் அவர்கள் எங்கு இருக்கின்றார்கள் என அவ்வாறான வாழ்க்கை வாழ்கின்றார்கள் எனவும் சீமான் தெரிவித்துள்ளார்.

றொபேர்ட் பயாசை இரண்டு மாதங்கள் சிறைவிடுவிப்பில் விடுவித்தீர்கள் சமூகத்திற்கு சட்டமொழுங்கிற்கு கேடுவிளைவிக்கும் விதத்தில் அவர் நடந்து கொண்டாரா என கேள்வி எழுப்பியுள்ள சீமான் பேரறிவாளனிற்கு கொடுக்கப்பட்ட தீர்ப்புதான் அனைவருக்கும் என நீதிபதிகள் தெரிவித்துவிட்டனர் அப்படி எனும் போது அவர்கள் தங்கள் நாட்டிற்கு செல்வதற்கு நீங்கள் அனுமதித்திருக்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சாந்தனுடைய கடைசிவிருப்பம் கடைசியாக தாயை பார்த்து ஒருவாய்சோற்றை அவர் கையால் சாப்பிடவேண்டும் என்பதுதான், அதைக்கூட நிறைவேற்றிவைக்கமுடியவில்லை எனவும் குறிப்பிட்டுள்ள சீமான் இது ஒரு சட்டக்கொலை அவ்வளவுதான் நியாயமாக இது ஒரு கொலை இதனை ஒரு சட்டப்படி இடம் பெற்ற கொலை என்றுதான் தெரிவிக்கவேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## அரச சார்பற்ற நிறுவனங்களின மீளாய்வு கூட்டம் திருமலையில்

(ஹஸ்பர் ஏ.எச்)

உலக அரசசார்பற்ற நிறுவனங்கள் தினம் செவ்வாய்;கிழமை ஆகும். திருகோணமலை மாவட்டத்தில் இயங்கும் அரசசார்பற்ற நிறுவனங்கள் மாவட்டமக்களுக்கும் பிள்ளைகளுக்கும் பெருமளவிலான சேவைகளை வழங்கி வருகின்றது. எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அனைத்து வேலைத்திட்டங்களையும் உரிய நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

திருகோணமலை மாவட்டத்தில் இயங்கி வரும் அரச சார்பற்ற நிறுவனங்களின் முன்னேற்ற மீளாய்வு கூட்டம் செவ்வாய்க்கிழமை திருகோணமலை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ் தலைமையில் நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டு முதல் காலாண்டில் மாவட்டத்தில் செயற்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படும் செயற்திட்டங்கள் பற்றிய தெளிவூட்டல் அரசு சாரா நிறுவனங்களின் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டது.மேலும், கடந்த 2023 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

40 இற்கும் மேற்பட்ட அரசு சாரா நிறுவனங்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. மேலும் அரசு சாரா நிறுவனங்களின் பிரதிநிதிகள் தமது கருத்துக்களை முன்வைப்பதற்கும் இதன்போது சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் அரசு சாரா நிறுவன ஒருங்கிணைப்பதிகாரி ஏ.எம்.எஸ்.பி.அத்தநாயக்க, நுண் நிதியங்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களுக்கான மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.நிர்மலகாந்தன் மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (05)

## தென்கிழக்கு பல்கலை சர்வதேச ஆய்வரங்கு மறுநாள் ஒத்திவைப்பு

இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழகத்தில் இன்று (வியாழக்கிழமை) இடம்பெறவிருந்த 12 ஆவது சர்வதேச ஆய்வரங்கு, நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழக நிர்வாக மற்றும் கல்விசாரா ஊழியர்களின் தொழிற்சங்கங்களின் சம்மேளனம் முன்னெடுக்கின்ற தொடர்ச்சியான இரு நாள்கள் கொண்ட அடையாள வேலை நிறுத்தத்தின் காரணமாக, அடுத்த நாள் வரைக்கும் நாளை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக ஆய்வரங்கின் இணைப்பாளர் பேராசிரியர் ஏ.எம்.எம். முஸ்தபா தெரிவித்துள்ளார்.

நீண்ட நாள்களுக்கு முன்னர் திட்டமிடப்பட்ட குறித்த ஆய்வரங்கு திடீரென ஏற்பட்ட ஊழியர்களின் வேலைநிறுத்த போராட்டம் காரணமாக அடுத்த நாளைக்கு நாளை(வெள்ளிக்கிழமை) ஒத்திவைக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இருந்தபோதும் திட்டமிடப்பட்ட நிகழ்வுகள் 2024.03.01 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறும் என்றும் ஏற்பட்டுள்ள தடங்கலுக்கு வருந்துவதாகவும் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் பேராசிரியர் கமால் விச்கோம் பிரதான பேச்சாளராக கலந்து கொள்ளவுள்ளார். குறித்த மாநாட்டில் 200 ஆராச்சி கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## சுமந்திரன் எம்.பியிஞீன் தாயாரின் மறைவுக்கு கனடா தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அஞ்சலி



தாயாரை இழந்து வாடும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் துயரில் நாமும் பங்கு கொள்கிறோம்.

- இவ்வாறு இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளது கனடாத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

அது அனுப்பியுள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மதிப்புக்குரிய எம்.ஏ.சுமந்திரனின் தாயார் இயற்கை எய்தினார் என்ற செய்தி அறிந்து கவலை அடைகிறோம்.

அவரது தாயார் வையத்தில் நிறைவாழ்வு வாழ்ந்து மறைந்துள்ளார்.

தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படுவர் என்கிறார் திருவள்ளுவர். ஒருவர் நேர்மையானவரா அல்லது நெறி தவறி, நீதி தவறி நடந்தவரா என்ற வேறுபாட்டை அவரவர் தம்

செல்வம், புகழ், பிள்ளைகளின் ஒழுக்கம் ஆகியவற்றால் அறிந்து கொள்ளலாம்.

இதற்கு முற்றிலும் பொருத்தமானவர் சுமந்திரன் அவர்களின் தாயார்.

தாயாரை இழந்து வாடும் சுமந்திரனுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவர்களது துயரிலும் பங்கு கொள்கின்றோம்.

- என்றுள்ளது.(05)

## புதிய புற்களைத் தேடி உண்டு வரும் 100 இற்கும் மேற்பட்ட யானைகள்

(பாறுக் ஷிஹான்)

யானை கூட்டம் ஒன்று வேளாண்மை அறுவடையின் பின்னர் புதிதாக முளைக்கின்ற புல் இனங்களை உண்பதற்காக நாடிவருகின்றன.

அம்பாறை மாவட்டத்தில் நேற்று திடீரென சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வளத்தாப்பிட்டி வில்லுக்குளப் பகுதிகளை ஊடறுத்து யானைகள் இவ்வாறு வருகை தந்துள்ளன.

யானைகள் அங்குள்ள புதிய புல் இனங்களை உண்ணுவதுடன் கூட்டத்தில் உள்ள யானை குட்டிகள் விளையாடுவதையும் காண முடிந்தது. பெரியயானைகள் மற்றும் குட்டிகள் என 100 இற்கும் அதிகமான யானைகள் அப்பகுதியில் உள்ள அறுவடை செய்யப்பட்ட வயல் நிலங்களை நோக்கி வருகை தந்திருந்தன.

தினமும் அப்பகுதிக்கு வரும் யானை கூட்டத்தை மக்கள் பார்வையிட்டு வருகின்றதுடன் இவ்வாறு வயல் வெளிகளை நோக்கி வருகை தந்துள்ள யானைகள் ஊருக்குள் பிரவேசிக்க முடியாத வகையில் பார்வையாளர்களாக உள்ள மக்கள் சத்தங்களை எழுப்பிய வண்ணம் உள்ளனர்.மேலும் இப் பிரதேசத்தில் அண்மையில் வேளாண்மை அறுவடை மேற்கொள்ளப்பட்ட நிலையில் தீ வைக்கப்படுவதாலும் அங்கு கொட்டப்படும் குப்பைகளை தினந்தோறும் 30 இற்கும் மேற்பட்ட யானைகள் உண்ணுவதற்கு வருகைதருவதுடன் அருகில் உள்ள பொதுமக்களின் உடைமைகளுக்கும் சேதம் விளைவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.(05)

## மூதூர் பிரதேச செயலக நடமாடும் சேவை நிகழ்வு

(மூதூர் நிருபர்)

பிறப்புச்சான்றிதழ்கள் இல்லாத மக்களுக்கு காலங்கடந்த பிறப்புச்சான்றிதழைப் பெற்றுக்கொடுப்பதற்கான தகவல்களை திரட்டுவது தொடர்பிலான ஆரம்ப நடமாடும் சேவையானது மூதூர்பிரதேசசெயலாளர்பிரிவிலுள்ள பாட்டாளிபுரம் கிராம சேவையாளர் காரியாலயத்தில் நிர்வாக உத்தியோகத்தர் ஏ.அலாவுதீன் தலைமையில் செவ்வாய்கிழமை நடைபெற்றது.

இதற்கு ஒபர் அமைப்பு அனுசரணை வழங்கியது. இதில் நல்லூர், பாட்டாளிபுரம், நீனாக்கேணி,



வீரமா நகர் மலை, முந்தல் உள்ளிட்ட பகுதிகளை உள்ளடக்கி மேற்கொள்ளப்பட்டதாக மூதூர் பிரதேச செயலாளர் எம்.பீ.எம்.முபாறக் கூறினார். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.02.2024இல் வெளியிடப்பெற்றது.